347

Registered No. M. 2445.

17 JUL 1981

உ
சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம்
ஸ்ரீ சிவஞானபாலைய தேசிக சுவாமிகள்
அருட் கொடையால்,
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றற்
கழகத்தினின்றுவரும்
செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் க | சுக்கில ஆண்டு மார்கழித் திங்கள் 1929—டிசம்பர். | இதழ் கஉ

க. மாயை பூமிக்குவருதல் :—

உ. ஸ்ரீபசவேச விஜயம் :—

ங. சிவசர்வோத்தமத்வம் :—

ச. கர்ப்பலிங்கதாரணம் :—

ரு. வடநாட்டு நிகழ்ச்சிகள் :—

சு. அபிஷேகமாலையுரை :—

எ. கைத்தலமாலை :—

பத்திராசிரியர் { வீ. குமாரவீரையர்,
'வீரசைவநிலையம்' முசிறி, திருச்சிஜில்லா.

விவேகபானு பிரஸ் பிராஞ்சு, குளித்தலை.

நன்றி பாராட்டல்.

எல்லாம் வல்ல இறைவராகிய சிவபெருமான் திருவருளானும், பொம்மபுரம் 18-வது பட்டம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞானபாலையசுவாமிகள் பெருங்கருணையானும், கட்டுரை எழுதிவரும் ஆன்றோரானும் நமது "வீரசைவம்" என்னும் இத்திங்கள் வெளியீடு பன்னிரெண்டு மாதமும் நிரம்பப்பெற்று ஓராண்டுச் செல்வக் குழந்தையாகத் தவழ்ந்து நிலவுகின்றது. இதனை இங்ஙனம் நின்று நிலவச்செய்த சுவாமிகளுடைய திருவடிக்கண்ணும், ஆன்றோரிடத்தும் வீரசைவ சமூகமும் தமிழகமும் நன்றிபாராட்டும் உரிமையுடையவாகின்றன. தவழும் பருவத்திலிருக்கின்ற அருமருந்தன்ன குழவியாகிய வீரசைவம் என்னும் மலர் ஆண்டுதோறும் பல்வகை வளமும் பெற்று வளர்ந்து, சமயவுண்மை, சமூகச்சீர்திருத்தம், தமிழ்மொழிச்சுவை என்னும் நறுமணங்கமழ நாடெங்குஞ் சென்று உலாவிவருமாறு திருவருள் உடனின்று இயக்குவதாகுக. புரவலராகிய சுவாமிகளும் போற்றிப்புரந்தருவார்களாக. கல்வியிற் பெரியார் கட்டுரையெழுதிக் கவின்பெறச் செய்வார்களாக. ஆவனசெய்யும் கழகத்தார் முதலிய பிறரும் தங்கடமையைச் செய்து புகழ் பெறுவாராக. இரண்டாவது மலர் தொடக்கத்திலிருந்து இதழ்கள்தோறும் **வீரசைவ தத்துவப்பிரகாச முதலிய தத்துவ நூலாராச்சியும், உபநிஷத்தாதி ஆகமமொழி பெயர்ப்பும், தமிழிலக்கிய நூலாராய்ச்சியும், சரித்திரப்பகுதியும்** வெளிவருதற்கான முயற்சியை அறிஞர் பலர் மேற்கொண்டிருத்தலான் இதன் வளர்ச்சிக்கு இன்றியமையாக் காரணமாகிய சந்தாதாரர்களைச் சேர்ப்பதில் நமது தொண்டர்கள் ஊக்கங்கொண்டு முயல்வார்களாக. இத்தொண்டில் இதுவரைநேர்ந்த குறைகளைமன்னித்து அறிவுறுத்தி எம்மை நன்றித்தொண்டராக்குமாறு பெரியாரது பெருங்கருணையை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,

பத்திராசிரியர்.

34
17 JUL 1931

உ

சிவமயம்.

"வீரசைவம்.

பொம்மபுரம் ஸ்ரீசிவஞானபாலயதேசிகசுவாமிகள் அருட்கொடையால் தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றற் கழகத்தினின்று வரும் செந்தமிழ்த்திங்கள் வெளியீடு.

மலர் க	சுக்கில ஆண்டு மார்கழித் திங்கள் 1929—டிசம்பர்.	இதழ் கஉ

மாயை பூமிக்கு வருதல்.

(திருவாளர், உருத்திரசாமி ஐயர் அவர்கள், தமிழாசிரியர், புலிசை.)

உமாதேவியார்பால் விடைபெற்றுக் கயிலைநீங்கிய மாயை அவதரிக்கப் புண்ணியஞ்செய்திருந்தது விளவலதேயம். களங்கம்இல்லாத திங்கள்போல் துலங்கும் சங்கை யேந்திய பண்ணவனும் நாரணன் பூதேவியை மணந்த அந்நாள் அவள் அணிந்துள மதாணிபோல் அவ் விளவலதேயம் விளங்கியது. அந்நாட்டின்கண் அமைந்த தடாகங்கள் தாமரை நீலோற்பலம்ஆகியநீர்ப்பூக்களால் நிறையப்பெற்று, மன்மதன் அம்புக்கூடு என விளங்கின. செங்கரும்புகள் மலிந்த வயல்கள் யாவும், அவன் விற்கூடங்கள் எனச் சிறந்தன. குயில் தங்கிக் கூவப்பெற்ற சோலைகள் அனைத்தும், அவனது சின்னச்சாலைகளை ஒத்தன. அழகிய மடவார் உறையும் மனைகள் யாவும் அவன் போர்க்களம் ஒத்துப் பொலிந்தன. அந்நாட்டில் வசிக்கும் மாந்தர் அனைவரும் பொறையாகிய குணத்தினால் தங்கள் புகழை நிறுவுவார்கள். விருந்தினரைத் தங்கள் இனிய சொற்களால் குளிர்வித்து இல்லத்தில் இருத்துவார்கள். குரு உபதேசித்த மொழிப்படியே நின்று மனதை அடக்குவார்கள். பேரறஞ்செய்து பெருஞ் செல்வத்தை வளர்ப்பார்கள். இன்னும் குபேரனும் தலைகுனியத்தக்க பெருநிதி படைத்தவர்களாக வாழ்ந்தார்கள். ஆதிசேடனும் அதிசயிக்கத்தக்க அறிவாற்றலுடையவர்களாகத் திகழ்ந்தார்கள். மன்மதனும் மதிமயங்கத்தக்க பேரழகு வாய்ந்தவர்களாக விளங்கினார்கள்.

அவ்விளவலதேயத்துத் தலைநகராகிய வனவசைமாநகரம் பூதேவியின் மதாணியின் நடுவண் பதித்த நாயகமணிபோல் பொலிந்தது. அவ்வூர்ச் சோலைகளில் பூமிக்குள் வேர்ப்பலா பழுத்து வெடித்ததனால் உண்டான நிலப்பிளப்பின் வழியே அனந்தன் முடிமீது அமர்ந்த மணியின் கதிரானது, ஊடுருவிச் சென்று வானத்தில் தங்கிய சந்திரனைத் தொடலால் மன்மதனது குடைக்கு இட்ட காம்பினை ஒத்து விளங்கியது. அறம் இயற்றும் இல்லங்களிற் சென்று ஐயம் ஏற்று உண்டுபின் தம் குகைகளில் தங்கும் துறவினர்போல் வண்டுகள் இதழ் விரிந்த மலரினுள்ள தேனை அருந்தித் தத்தம் குரம்பையிற் சேரும். பதுங்கியிருந்து சமயம் நோக்கி வீட்டில் நுழைந்து, அங்குறைபவர்கள் கூக்குரலிடப் பொருள்களைக் கொள்ளைகொள்ளும் கள்வர்போல் வண்டுகள் இரவிற் கமலங்களிற் றங்கி விடிதருகாலையிற் சோலையில் நுழைந்து அங்குள குயில்கள்கூவத் தேனைக் கொள்ளையாகஉண்டுசெல்லும். சோலைகளில் மிகுதியாக வண்டுகள் மொய்ப்பதனால் பூக்களிற் செறிந்த மகரந்தப் பொடிகள் கீழே உதிர்ந்து தெளிவாக ஓடும் தேன் பெருக்கத்தைக் கலக்கி ஓடாமற்றடுக்கும் அன்னங்கள் தங்கிய வயல்கள், மச்சங்கள் கமலங்கள் சங்கங்கள் நிறையப்பெற்று மலரோடு கூடிய அம்பினை (சலத்தினை) த் தன்பால் வைத்திருப்பதனால், மச்சரேகை, பதுமரேகை, சங்கரேகைகளோடு விளக்கமுற்று மலராகிய அம்பினை (பாணத்தை) த் தாங்கும் மன்மதனது கரங்களை ஒத்தன. நாரணனது சாரூபம் பெறுபவர்களுக்கு அளிக்கப்படும் சங்கங்கள் தோன்றும் இடம் இது என, பல உயர்ந்த சங்கங்கள் அங்கு வாவிகளில் மொய்த்துக்கொண்டிருந்தன. அந்த நகரத்தைச் சூழ்ந்துள அகழி அனந்தன் முடிவரை சூழ்ந்து தாழ்ந்தும், அந்நகரத்து சுற்றிலும் உள்ள மதில் விண்ணிற் செல்லும் காய்கதிரோன் கால் அளவு உயர்ந்தும், தாழ்வோர் உயர்வார், உயர்ந்தோர் தாழ்வார் என்னும் நீதியைக் கற்பித்துக்கொண்டு நிற்கும். பதினெண்கலை பயின்ற மறையோர் சொற்போர் புரிவார். தருமமும் வலிமையும் உற்ற வேந்தர் விற்போர் புரிவர். தம் பொருள்போல் பிறர் பொருளையும் பேணும் தகைமையுடைய வணிகர் பொன்போர் புரிவர். தாளாண்மையுள்ள வேளாளர் நெற்போர் புரிவார். அவ்வூரின்கண் இரப்பார் இல்லாக்குறையேயன்றி, உடையால் குறைவில்லை; அணிகளால் குறைவில்லை; அலர்களால் குறைவில்லை; தங்கும் இடத்தால் குறைவில்லை. ' ஒரு கொம்புள்ள ஈசன் அளித்த யானைக்கு இரண்டு கொம்புள்ள யாங்கள் நிகரானால் இரண்டு

கொம்புள்ள எங்கட்கு நான்கு கொம்புகள் உள்ள ஐராவதம் நிகராகும், எனும் யானைகள் தெருவிற் செல்லும். " ஓர் உருளையையுடைய சூரியனது இரதத்தினை இழுத்துச்செல்லும் ஏழு குதிரைகளினும் இரண்டு உருளையையுடைய சகடத்தை இழுத்துச்செல்லும் கடாக்கள் மேன்மையுற்றால், சூரியனது இரதத்தை இழுத்துச்செல்லும் ஏழு குதிரைகளும் ஒன்றினையும் இழுத்துச்செல்லாத எங்களினும் மேம்பாடுடையன " எனும் குதிரைகள் வீதிகளில் உலாவும், மறைபயில் ஒலியும், கலைபயில் ஒலியும், மங்கலப்பறை ஒலியும், குழலொலியும், யாழொலியும், மணித்தேரின் ஒலியும் திரைகடலின் ஒலிபோற் சென்று விண்ணவரைச் செவிடுபடுக்கும். அம்பிகையின் அம்சமாகிய மாயை பிறக்க இடமாயது என்றால் வனவசைமாநகரின் சிறப்பை எவர் எடுத்துக் கூறுவர் ?

அத்தகைய மேன்மைமிக்கநகரை மமகாரன் என்னும்வேந்தன் அருளொடு செங்கோல் செலுத்திவந்தனன். அலைகடலில் துயிலும் அரியென அவனியின்கண் உள்ள ஆருயிர்களை ஆதரித்து அளித்து வந்தான். சலமகளாகிய இலக்குமியை மார்பில் தாங்கிய நாரணன் போல், ஜயமகளாகிய விந்தையைத் தோளில் தாங்கினான். இலக்குமியை விட்ணு இன்ப நுகர்வாகிய தன்நலங்கருதி இருத்தினான். இவன் வீர இலக்குமியை மக்களைக்காத்தலாகிய உயிர்நலங் கருதி வைத்தனன். எட்டு யானைகளும், எட்டு மலைகளும், எட்டு நாகங்களும் சுமக்கும் இப்பூமியைத் தன்னொரு தோளினால் தாங்கும் திறல் வாய்ந்தவன். இன்னும் இவன் தன் பூமியைப் பகைவர் கவராமற் காத்தான். தன் கீழ்வாழ் குடிகட்குத் தன்னால், தன் பரிசனத்தால், பகைவரால், கள்வரால் பயம் இலாது காத்தான். பயிர்களை விலங்குகளால் நாசம் உறாது காத்தான். குடிமக்களைத் தீமைசெய்யாது தண்டித்துத் தடுத்தும், நன்மைபுரியுமாறு நடாத்தியும் இறுதியில் அவர்கட்கு இயமபயமும் அடையாமற் காத்துவந்தான். இவன் இல்லை என்னாது ஈயும் ஈகையாளன். எங்கும் பரவும் இசையாளன். தனக்குத் தானே நிகர் எனத் தருக்கி வாழ்வோன்.

இவன் வாழ்க்கைத் துணையாய் அமர்ந்தவள் நீண்டு வணங்கிய குழலினள் ; வேல் எனக் கண்ணுடை மடவாள் ; தளர்ந்து அசையும் நுண்ணிய இடையினள் ; விம்மிப் பருத்த தேமல்பரந்ததனத்தினள்; பூங்கொம்பெனத் திகழ்பவள் ; அமுதம் நிகர் மதுர மொழியாள் ;

மோகினி என்னும் பெயருடையாள் ; மாயையை மகளாகப்பெறும் தவமுடையாள்.

நாம் முன்செய்தவினைகாரணமாக வருவதும், நம்முடன்சிறிது போழ்து உடன் உறைவதும், நமக்குவேண்டும் இன்ப நுகர்வைத் தருவதும், வினைமுடிந்தபின் பிரிவதும், நமது அல்லாததும் ஆகிய மனைவி மக்கள் முதலியபொருள்கள் அனைத்தையும் எமது எமது எனவும், என்றும் பிரியாதது எனவும், என்றும் அழியாதது எனவும் கருதும் பண்புடையன் இவ்வரசன். ஆதலால் இவனை மமகாரன் எனப் பெரியோர் அழைப்பர். இத்தகைய மமகாரமாகிய தன்மை தோன்றற்குக் காரணமாய், தோன்றியது செவ்வன் வளர்தற்கு ஆதாரமாய், எக்காலத்தும் உடன் இருந்து இவ்வாழ்வைக் கருதுவதாய் உள்ளது ஆசை அல்லது மோகம் என்னும் குணமேயாம். எதிர்ப்படும் ஒவ்வொரு பொருளையும் பற்றுவதற்குக் காரணம் மோகம். பற்றிய பொருளை விடாமைக்குக் காரணம் மோகம். விட்டகாலத்து மிகவருந்துதற்குக் காரணம் மோகம். மமகாரனுக்கு அம்மோகத்தையே மிகவும் வளர்த்துக்கொண்டு வாழ்க்கைத் துணையாய் இருந்தவள் ஆதலின் இவளை மோகினி என்றார்கள்.

இவர்கள் பல்வகை வளங்கள் நிறையப்பெற்றும் மகவிலாக் குறைவால் மிக வருந்தினார்கள். அரனைக்குறித்து அருந்தவஞ் செய்தார்கள். அத்தவத்தின் பயனாக மாயை மோகினியின் கருப்பத்தில் அடைந்தாள். அவள் உற்றகருப்பத்திற்கேற்பச் சரீரம் வெளுத்தது. கொங்கையின் முகங்கள் கறுத்தன. பசிய நரம்பு மேலே காணப் பரந்தது. பொய்த்தூக்கமும் வந்தது. புளிக்கறியில் விருப்பமும் தோன்றியது. இன்னணம் பத்துத் திங்கள் சென்றன. உயர்ந்த சலஞ்சலம் எனும்சங்கம் இனிய ஒளியினையுடைய முத்தினைத்தந்தது என மோகினி யென்பாள் பெண் மகளை ஈன்றாள். மங்கலம் நிறைந்த அரசி மகப்பெறுநாளில் சங்கு, மத்தளம், சச்சரி, தாளம், ஊது கொம்பு, உடுக்கை, பேரிகை முதலிய வாத்தியங்கள் எல்லாம் மன்மதன் தனக்கு எழுந்த உவகையினால் தன் முரசாகிய கடலினையும் முழக்கினனோ என்னும்படி மிக அதிர்த்தன. அரசனும் பெருமகிழ்வுகொண்டு அந்தணர்கட்கு பூண், துகில், மணி, பொன், நிலம் மற்றும் வேண்டின யாவும் வெறுப்ப அளித்தான். மன்மதனும் தனக்கு நல்ல சேனைப் பலம் கிடைத்தது என உவகை நெஞ்சம் பொங்கி எங்கணும் மலர்க் கணைகளைத் தூர்த்தான். மலர் மழையினையும் சொரிந்தான்.

நிலத்திலும், நதிக்கரையிலும், குகைகளிலும், தழைக்குடில்களிலும் உற்றுத் தங்கிப் புற்றாகவும், மரமாகவும் அசைவற நின்றும், புனலில் மூழ்கியும், தீயில் இருந்தும், ஊணும்நீத்து, உறக்கமும்விட்டு அருந்தவம் புரியும் முனிவர்களின் மனம் மயலில் மூழ்கிப்பதைத்தன. பஞ்சபூதங்களும் தத்தம் நிலைகெட்டுத் தடுமாற்றம்அடையுங்காலத்தும் சிறிதும் அசைவில்லாத நப்மனம் இன்று கலங்கினமைக்குக் காரணம் யாதோ என்று முனிவர்கள் ஒன்றுகூடி அயரும்போது தளர்ந்தவிடத்து உதவுங் கல்விபோல் துருவாசமுனிவர் அவர்கள்முன் குறுகினர். முனிவர் அனைவரும் அவரை எதிர்சென்று அழைத்து ஆதனத்து இருத்தி, உளங்கனியத் துதித்து பாதமலர்களில்நறுமலர் தூவிவந்தனை செய்துநின்று, "ஐயனே! இதுகாறும் சித்திரத்து எழுதிய விளக்குப்போல் அசைவற இருந்த அடியேங்களுடைய உள்ளம் எல்லாம், காற்றின்முன்பட்ட சிறு சுடர்போல் நிலைதடுமாறின. காரணம்யாதோ? அறிகிலம் அருள்செய்க" என வேண்டினர். சுந்தரி தான்கொண்ட சபதத்தினால் தன் தமோகுண வடிவமாகிய மாயையினை பூமியில் விடுக்க, அவள் வனவசைநகரின்கண் பிள்ளையாய்த் தோன்றினமையால் உங்கள் நெஞ்சம் தன் ஆற்றல் உடைந்தது. என்று துருவாசன் உரைத்தனன். "அருந்தவ முனிவரே! தேவரீர் கூறியது உண்மையே. பெருந்தவம் முயலும் நெஞ்சம் பிறழ்தற்கு ஏதுவில்லை. தேவரீர் எழுந்தருளப்பெற்றமையின் எங்கள்பால்உற்ற ஐயம் முற்றும்அகன்றது." என்றுகூறி "பார்வதியம்மையார் பரமன்பால் சூள்கொண்டது என்? அதற்கு ஏன் மாயையினை உலகில் அனுப்புதல்வேண்டும்? யாங்கள் இதனைத் தெளிய உரைத்தருள்க" எனப்பணிந்து வேண்டினர் முனிவர். "கயிலையின்கண் பரமசிவன் திருவோலக்கம் கொண்டநாள் பூமியில் ஞானசித்தி அருளவல்ல அல்லமதேவனை இங்குக் கூடியுள்ள தேவர்கள் அறியார்கள். அவன் இயல்பினை அறிவது அம்மைக்கும் அரிது எனக்கூறக்கேட்ட சங்கரி, தான் அவனை அறிவதாக விளக்கினைத்தேட இருளை விடுத்தாற்போல் அல்லமனை அறிய மாயையை இவ்வுலகத்தின்கண் அனுப்பினள். கயிலையினின்றும் நீங்கி மாயை வருதற்குக்காரணம் இதுவே. மாயை என்னும் மரணத்தை விளைக்கும் விஷமயக்கம், நீங்கவேண்டின் அல்லமதேவனாகிய கருடனை நினையுங்கள். அவ்விஷம் விரைவில் அகலும். இன்றும் இணையில்லாத அண்ணலாகிய அல்லமனை அகத்துள் இருத்தி வழிபடுவோர்க்குத் தீராப்பிணி நீங்கும். வாழ்நாள் நனிவளரும். பெருஞ்செல்வம் மிகப்பெரு

கும். கல்வி எளிதிற் கைகூடும். வானமும் வந்து வணங்கும். நற்புத்திவரும். மெய்ப்பத்தி உதிக்கும். அஞ்ஞான இருள் இரியும். ஞானவொளி ஒளிரும். பேரின்பமாகிய முத்தியும் சித்திக்கும். ஆதலால் அத்தன்மைவாய்ந்த அல்லமதேவனை நினைந்து நினைந்து நுங்கள் மனக்கலக்கம் ஒழிந்து அருந்தவம் இயற்றுங்கள்." என்று அருளி, துருவாசன் தன்னிடம் அடைந்தனன். மந்தரகிரியாகிய மத்து எறி கடல்போல் சிந்தனை கலங்கியிருந்த முனிவர் குழாங்கள், துருவாசன் மொழிந்த மொழிப்படியே அல்லமதேவனது மலரடியைச்சிந்தித்தும், வந்தித்தும், அவன் புகழ்களைப் பாடியும், பரவியும் பரவசப்பட்டு இருந்தார்கள். அன்றியும் மனமெனும் அகலில் அன்பெனும் நெய்யை நிறையப்பெய்து அறிவெனும் திரிபற்றிட அல்லமப்பேர்ச்சுடர்கொளுவி தங்களைக் கவிந்துள மாயையாம் வல்லிருள் அகல விளக்கம் உற்றிருந்தார்கள். கலங்கித் தெளிந்த முனிவர்செயல் இவ்வாறாக.

அரசன் தன் இளமகவை நோக்கிக்களித்தான். காந்தக்கல்லினால்இழுக்கப்படும் இரும்பைப்போல் அம்மகவானது தனது அழகு மிக்க கூரிய பார்வையினால் தன்னை நோக்குபவர்களது மனதை வேறு பொருள்களில் செல்லவொட்டாது தடுத்துத் தன்வசமாகக்கவர்ந்தது. அன்றியும் மனம் ஓர் அணுப்பிரமாணமானதுஎன்று நையாயிகர்கூறும் கொள்கைக்கு மாறாக, அம்மனத்தில் ஆசையாகிய பெருங்கடலைப் புகட்டினது. கண்ணுக்கும் புலனாகாத மிக நுண்ணிய மனமாகிய ஆதாரத்தில் மிகப் பெருங்கடலாகிய ஆதேயத்தை நுழைவிக்கும் வல்லமை வாய்ந்த தன் மகட்கு மாயை என்று நாமம் சூட்டி, இன்னும் வேண்டும் பல சிறப்புக்கள் குறைவின்றிச் செய்தனன் மமகாரன் எனும் தந்தை. மோகினித்தாயும் மாயைப்பெயர்வாய்ந்த மகளை நறுமஞ்சள் நிறையப்பூசி, தன் கணைக்காலிற் கிடத்தி நீராட்டினாள். இரண்டு கண்களினும் மஞ்சள்தூள் விழாமல் ஒதுக்கினாள். உச்சியில் நீர் உறாமல் ஊதினாள். மெல்லிய வத்திரத்தினால் மேனியில்உள்ள ஈரம் போக்கினாள். நெகிழ்ந்த மென்முலையோடு உறத் தழுவினாள். விபூதி அணிந்தாள். வாயில் எச்சில்கொடு தரையில் தேய்த்து மண்பொட்டு இட்டாள். கண்ணிற்கு மை தீட்டினாள். காற்குச்சதங்கைமுதலிய புனைந்தாள். இடையில் பொன்னரைஞாண் பொலிவுறப் பூட்டினாள். புலிநகங்கொடு குயிற்றிய பொன்னாபரணத்தை மார்பில் தரித்தாள். கைகளில் வளையல் இட்டாள். நெற்றியிற் சுட்டி கட்டினாள். செஞ் சோறு

முதலிய பொருள்களால் கண்மிச்சில் போக்கினுள். அன்போடு அமுதம் ஊட்டினுள். பொற்றெட்டிலிற் கிடத்தித் தாலாட்டினுள். "கண் மணியே, கரும்பே, அமுதமே, திருவே" எனச் செவ்வியசொற்களால் சீராட்டினுள். இன்னும் ஓர் வறியஉழவன் தன்வயல் செவ்வன் விளையுமாறு எரு இடல், களைகட்டல், நீர்ப்பாய்ச்சல் முதலிய செய்கைகளை பருவத்தில் செய்துகாப்பதுபோல் மகவிற்கு வேளையில் அமுதூட்டல் நீராட்டல் முதலிய செய்கைகளைத் தவருதுசெய்தும்; கல்வியில் விருப்பம்உள்ளவன் கற்ற பொருள்கள் மறதிஉருமல் அடிக்கடி அவைகளை நினைவிற்குக் கொண்டுவந்து போற்றுவதுபோல் தன்மகவை உடனுக்குடன் போய்ப்பார்த்துக் கவனித்தும்; நீதிகோடாத செங்கோல் இயற்றும் மனுவேந்தன் தன்கீழ் வாழ் குடிகட்டு இடையூறு வராது புரப்பதுபோல குழந்தைக்கு கொசு முதலியவைகளால் துன்பம் உருது நோக்கியும் அருமையாக வளர்த்தாள் அரியதவஞ் செய்து பெற்ற மோகினி.

மாயையாகிய மகவும் 'கள்ளம் நிறைந்த மாயையே! உன்அழகைப்போல் கண்டது இல்லை' எனத் தலை அசைத்தல்போல் அசையும் விளக்கின் சுடரைச் சிலவேளை கண்டுகளிக்கும். ஒருவேளை மெல்லிய விரலினைச் சுவைத்துக்கொண்டிருக்கும். ஒரு சமயம் கால்களை உதைத்துக்கொண்டு மலர்வாய் குவித்து அழும். ஒருவேளை சிரித்து மகிழும். மாயை முகங்கவிழ, செயலற்று முகங் கவிழ்ந்திருந்தமன்மதன் இருந்தான். அம்மாயை இருக்க, வில் ஒன்று எடுத்து மதனன் எழுந்தான். பொற்பாவைபோன்ற மாயை எழ, அனங்கன் நடந்தான். அவள் நடப்ப, ஐந்தவித்து அருந்தவம் புரியும் துறவர்பால் ஓடினுன். "குழலினிது யாழினிது என்பதம் மக்கள் மழலைச்சொற்கேளாதவர்" எனும் மறைமொழிக்கு இணங்க குழலும் யாழும் இனியன எனக் கூறும்வண்ணம் மென்கனிவாய்திறந்து மழலையாம் செவியமுதம் ஊட்டினுள். "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்" எனும்வேதத்திற்கு ஏற்ப மாயை ஓடி பெற்ருேர்கள்மேல் விழுந்து உடற்கு இன்பம் தந்தாள். "அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள் சிறு கை அளாவிய கூழ்" எனும் வாக்கியத்திற்கு ஒக்க, அமிழ்தினும் இனிமை விளையுமாறு தன் சிறுகைகால் அவர்கள் உண்ணும் அடிசிலைக் குழப்பினுள். அல்லமனைப் பற்றவந்த அறிவால் தன் உருவநிழலைப் பிடிக்கமுயன்று முயன்றும் முடியாது அழுவாள். மங்கைப் பருவத்து தன்னைப் பகை

த்து அழல்வீசாவண்ணம் அதனுடன் நட்புக்கொள்பவளைப்போல் சந்திரனை வா வா என்று கைகாட்டி அழைப்பாள். அரசுபுரிந்த வேந்தன் இறக்க அவன் வழிவரும் மைந்தன் அவன் இருந்த தவிசில் அமர்வதுபோல் முன்னே முளைத்திருந்த வெண்பல் விழ வேறு ஒரு பல் அங்கு முளைத்து எழுகின்ற பேதைப்பருவம் அடைந்தாள் மாயை. பின்னர் பெதும்பைப் பருவம் நண்ணினள். கைபோகிய கம்மாளன் நிருமித்த சிம்மாசனத்தில் இரத்தினக்கிரீடம் தரித்து அரசன் வந்து வீற்றிருப்பதுபோல் கனத்த குதம்பையால் வளர்க்கப்பட்டு இடம் பண்ணப்பட்ட வள்ளையிலைபோன்ற காதில் இரத்தினங்கள் குயிற்றிய தோடு பொருந்தப் பொலிவுற்றாள். மலரம்பினையுடைய மன்மதனுக்குத் துர்க்கமாக வளர்க்கப்பட்ட கூந்தற்காடானது பூக்களோடு கலந்து (பழியுற்று) கட்டுண்டது. (காவலைப்பெற்றது) வஞ்சகம் இல்லாத கண்களிலும் சிறிது நஞ்சம் பருவத்திற்கேற்ப வந்துதங்கிற்று. மயலாகிய வலையில் துறவாகிய பறவைகள் அகப்படுதலை மெல்ல எட்டிப் பார்ப்பதுபோல் இளமுலைகள் மாயையின் மார்பிற் றோன்றின. அம்மாயையாகிய கன்னி அன்னப்பறவையின் நடையும் அழகினைற் பின்னிட, அன்னம் இலாது அருந்தவம் இயற்றும் முனிவர் நடையும் (ஒழுக்கமும்) தளர்ச்சியுற நடக்கும் நடைகற்றாள். கரும்பினும் மிக இனிய மொழி பயிலக்கற்றாள். வண்டுகள்போல் அலமரும் காளையர்களது பார்வையின் குறிப்பு உணர்ந்தாள். தான் மிகவும் அருமையானவள் என எண்ணிக் கர்வித்திருந்தாள். மீனக்கொடியையுடைய தலைவனாகிய அனங்கன் இந்தக்கன்னியினது சந்திரன்போன்ற முகத்தின் முழுப்பார்வையினை அடைந்து, அவளது சிவந்த வாயின் வலியைப்பெற்று, அழகிய சிங்கம்போன்ற இடையை அடுத்துள அங்குலின் பெருவலி எய்தி முனிவராகும் பகைவரை வெல்ல, கரும்பாகிய வில்லில் வாசனைகமழும் பாணங்களைத் தொடுக்க ஆரம்பித்தான். (சிலேடை) மன்மதன் தன் கரும்புச்சிலையில் வாசனைவீசும் மலரம்புகளைத் தொடுத்து முனிவராகும் பகைவரைவெல்ல, ஏழாம்இடமாகிய கன்னிராசியில்உள்ள சந்திரனதுமுழுப்பார்வையினையும், வெற்றியைத் தரக்கூடிய ஆறுமிடமாகிய சிங்கராசியில் உள்ள ராகுவின்வலியையும், ஸ்தான பலத்தைத் தருவதற்கேற்பச் சொந்த இடத்தில் ஆட்சியாக இருக்கும் செவ்வாயினது பலத்தையும் பெற்றுள்ள மீனலக்கத்தில் புறப்பட்டான். பக்குவமாகச் சமைத்த அன்னம்போல் மாயை யானவள் அழகு பொங்கச்சமைந்தாள். மமகாரனும் தன் மகள் மங்கைப்

பருவம் அடைந்தமையை உள்ளத்திற்கொண்டு அயனும் மாலாக (மயங்க)த்தக்க ஓர் அழகிய கன்னிகாமாடத்தை நிருமித்து, பல கல்வித்துறைகளிலும் வல்ல மாதர்கள் பணிசெய்ய மாயையை அதன்கண் இருக்கச்செய்தனன்.

அவ்வழகிய மாடத்தில் நண்ணியிருந்த மாயை சிலகாலம் பாக்கள் பற்பல பயில்வாள். யாழ்வைத்துச் சிலகாலம் வாசிப்பாள். ஒருத்தி தண்ணுமை அதிர்க்க, பலர் நின்றுபாட, சிலகாலம் ஆடுவாள். சிலகாலம் பந்து அடிப்பாள். சிகைாலம் மலர்களைத் தொடுப்பாள். புனைவாள். சிலகாலம் வாசனைத்திரவியங்களைப் பூசி இன்புறுவாள்: சிலகாலம் பல அங்கங்களினும் ஆபரணங்களைப் புனைந்து அழகுபடுத்துவாள். உண்ணுங்காலத்தில் அறுசுவையுடன்கூடிய நால்வகையுண்டியினையும் உண்பாள். கிள்ளைக்கும் ஊட்டுவாள். அதனைப் பேசக் கற்பிப்பாள் சிலவேளை. இன்னணம் மாயை பொழுதுபோக்கிக்கொண்டிருந்தாள்.

இவள் இங்கு இருக்க, தந்தையாம் மமகாரன் இவளது மணப் பருவத்தை நினைத்துப் பாண்டியன், சோழன், சேரன், கொங்கணன், மாளுவன் முதலிய மன்னர்களுள் யாவர்பால் இவளது மணவினை உற்றதோ என்று ஆய்ந்து கொண்டிருக்குங்காலத்தில் அவனது குல குருவாகிய சாந்தவாங்காரன் அவ்விடம்வந்தனன். வேந்தனும் அவரது வருகையைக்கண்டு எதிர்கொண்டு முறையாகவணங்கினன். குருவும் மன்னவனது வணக்கத்தைபேற்று ஆசீர்வதித்து, மாயையினது எழில்நலத்தைக்காண அரசனுடன் கன்னிகாமாடம் சென்றனன். ஆசிரி[illegible] வருதலை நோக்கிய மாயை தேவனை அன்புடன் வணங்கி நின்றனள். தளிர் இலை அரும்பு மலர்களைப்பெற்று விளங்கும் பூங்கொடிபோன்ற கன்னியினது அழகைக் கவனித்து இவள் ஓர் காரண மாது எனத்துணிந்தான். இவளது உறுப்பிலக்கணத்தை நோக்கிய ஆசிரியன் அரசனை நோக்கி "இம்மாதின் தோள்நலத்தைக் கொள்பவர் யாவர்" என வினவ, அரசனும் "அடியேன்உணர்ந்திலன். அழகு மிக்க நம் கோதைதன் மணத்திற்கு உரியவராக மனிதர் தேவர்கணங்களுள் ஒருவரைத்தேர்ந்து உரைத்தருள்வீராக" என்றுவேண்டினன். "வாசனைகமழும் மாலைஅணிந்த மார்பினனே! தேவகங்கையை அடைவது கடவுள் அன்னம் அல்லாது கொக்கு அல்ல; அதுபோல இம் மங்கையை அணைபவர் சங்கரன் அலாது வேறெவரும் இலர்" என்று

துணிந்துரைத்தனன் சாந்தவாங்காரன். "நன்று தேவரீர் மொழிந்தது. அரியும் அயனும் அறியமாட்டாதவன் எங்ஙனம் இவ்வெழில் மங்கைக்கு எளியன் ஆவன்? அதனை உணர்த்தியருள்வீராக" என்று அரசன் வணங்க, "நீலகண்டனாகிய இறைவன் தன் உண்மைவடிவத்தொடு உறாமல் அன்பர் வேண்டிய வடிவங்கொண்டுவருவான். ஈது சத்தியம்" என்று அரசனோடு இயம்பி அக்குருபரன் மாயையாங் கன்னியை விளித்து அவளது கருத்தில் பொருந்துமாறு நன்னிலையினைச் செவ்வையாக உபதேசித்துத் தன்னிடஞ்சென்றனன். மாயையும் குருபரன் உபதேசித்த அருண்மொழிகளை உளத்திற்கொண்டு உணர்ந்து அவ்வனவசைமாநகரின்கண் திருக்கோயில் கொண்டருளிய மதுகைநாதனைப் பூசிக்க எண்ணினள்.

(தொடரும்)

ஸ்ரீ பசவேச விஜயம்.

(திருவாளர், G. C. வீரப்பா B. A., L. L. B., அவர்கள்.)

திருமணம்.

அறியாமை யென்னும் இருளால் மூடப்பட்டுப் பொருளில்லான் இளமைபோல்புன்மையுற்றிருந்த கர்நாடகதேயத்தின்கண் நம்பசவேசர் கல்வி அறிவு அன்பு அருள் முதலிய நற்குணங்களமையப்பெற்று கட்டழகமைந்த காளையம்பருவமுடையவராய் அருள்வல்லான் ஆக்கம் போன்று அணிபெற விளங்கிவந்தனர். இங்ஙனம் வாழும் நாளில் விச்சலதேயத்தின்கண் பலதேவர் என்னும் அமைச்சர் தாம் இயற்றிய தவப்பயனாகக் கற்பும் வனப்பும் கலந்துருவெடுத்தாற்போல் விளங்கிய ஓர் புதல்வியைப்பெற்று இன்புற வளர்த்துவருவாராயினர். அவர் மணப்பருவம் நிரம்பப்பெற்ற தம்புதல்விக்கேற்ற மணமகனைப் பல நாடுகளிலுந் தேடி ஒத்த பண்பும் நலனும் ஒருங்கே யமைந்தானொருவனைக் காணப்பெறாமையால் கவலையுற்றிருந்தனர்.

அப்பொழுது அவ்வமைச்சரது அறிவான்மிக்க நண்பரொருவர், அவர்பால்வந்து 'பிரபுவே! என் கவலையுறுகின்றீர்? வெண்ணெய் அருகிலிருக்க நெய்க்கு அலைவதுண்டோ! உம்முடைய புதல்வியோ

கண்கவர் வனப்பால் மிக்கு விளங்குவதேயன்றி உலகம்போற்றும் உத்தம மணாளனை மணப்பதற்குரிய பாக்கியமும் பண்பும் நிரம்பினவளாகக்காணப்படுகின்றாள்; ஆதலால், இளமைப்பருவத்திலேயே உண்மைஞானமடைந்து புகழ்பெற்றுவிளங்கும் பசவேசர் உமது பெண்மணிக்குத் தக்க மணமகனாகலாமெனத் தோன்றுகின்றது. அவரைப்பற்றி நீர் அறியாததொன்றில்லையே. அவர்பால் உமது எண்ணம் செல்லுமாயின் அறிவிற்சிறந்த தக்காரொருவரை அவர்பால்அனுப்பி அவரது உடன்பாட்டை யறியலாமே' என்றனர்.

பலதேவராகிய அமைச்சரும் பசவேசரது கல்யாணகுணகணங்களை முன்னரே அறிந்தவராகையாலும், ஊழ்கூட்டுதற்குமுற்பட்டமையாலும், நண்பரது எடுத்துக்காட்டு உடனின்றுதவினமையாலும் அதற்குடன்பட்டு, அவர்பால் மணம்பேசி வருதற்பொருட்டுத்தக்காரொருவரை அனுப்பிவைத்தனர்.

பசவேசர் தம்பால்வந்த தூதரை அன்புடன் உபசரித்து வந்தவரது உட்கருத்தையறிய ஆவலுடன் எதிர்பார்த்தனர். தூதராக வந்த பெரியார் பசவேசரைநோக்கி, 'உலகினரை உண்மைவழியில் நிறுத்த உதித்த உத்தமச்செல்வரே! விச்சலதேயத்தின் அமைச்சராகிய பலதேவரைப்பற்றித் தாங்கள் அறிந்திருக்கலாம். அவரால் அனுப்பப்பட்டமையால் யான் இன்று தங்கள் சன்னிதானத்தையடையும் பாக்கியமுடையவனாயினேன். அப்பலதேவருடையகுலம் குணம் செல்வமுதலியவற்றிற்கேற்பவும், இல்லறஞ்செய்த நல்லறப் பயனாகவும், அவரது புதல்வியார் கற்பினுக்கணியெனக் கண்கவர் வனப்புடையராய் மிளிர்கின்றனர். அப்பலதேவர் அவ்வம்மையாரது குணநலங்களையும் தங்களது ஒத்த உத்தமப்பண்பினையும் எண்ணித் தம்புதல்விக்காகவே தங்களைக் கடவுள்படைத்துள்ளாரென நம்பி, அக்கடவுளது எண்ணத்தை நிறைவேற்றக்கருதி அடியேனையும் தங்கள்பால் மணம்பேசிவர இப்பொழுது அனுப்பிவைத்துள்ளார்; ஆதலின் அடியேனது விண்ணப்பத்தைத் திருவுள்ளத்திலேற்றுப் பலதேவர் கவலையொழிந்து மனமகிழத்தக்க உத்தரவளிக்கவேண்டும்' என வினயமாக வேண்டிக்கொண்டனர்.

தூதரது மொழியைக்கேட்ட நம்பசவேசரோ சிறிதுநேரம் ஒன்றுந் தோன்றாதவராகித் திகைத்திருந்து பின் கனாக்கண்டு விழித்தவர்போலத் திடீரென்றெழுந்து, தம் கைகளால் தமது தலையைப்பிடி

த்துக்கொண்டு, சங்கமேசராலயத்துள்சென்று, சிறிதுநேரஞ்சென்று பின்னர் வெளியேவந்தனர். வந்தபின்னரும் தூதுவருக்கு ஒன்றும் பதிலுரைத்தாரில்லை. தூதரோ ஒன்றுந் தோன்ருதவராகிச் சிறிது நேரஞ்சென்று எமது வள்ளலே! உத்தரவளிக்கவில்லையே திருவுள்ளத்தின் கருத்துயாதோ என்றுவேண்டினர். அங்ஙனம் வேண்டிக் கொள்ளவே, பசவேசர் தூதரைநோக்கிப் 'பெரியீர்! உமது வருகைக்கு மகிழ்கின்றேன். மேலும் உமது அமைச்சரோ செல்வத்திற் சிறந்த சீமான். அவர் ஏழையாயும் பரதேசியாயும் அலையும் என்பால் அவரது புதல்வியை மணஞ்செய்துகொடுக்கக் கருதி உம்மை அனுப்பியதற்கு அவர்பால் நான் நன்றியறிதலுடையனுக இருக்கிறேன்; எனது வணக்கத்தையும் அவர்க்கு அறிவிக்கவேண்டுகின்றேன். ஆனல் அவரிடம் ஓர் மன்னிப்பைக் கேட்டுக்கொள்ளவேண்டியவனுக இருக்கிறேன். அஃதென்னையெனில், அவரது புதல்விக்குத் தகுந்த மணாளன் யானன்று. அரண்மனையாகிய தடாகத்தில் செல்வமாகிய நீர் நிலையில்வளர்ந்த தாமரைமலரனைய அக்கன்னிகையை, பாலைநிலமனைய வறியனுகிய என்னிடம் கொடுக்கத்துணிவீராயின் அக்கன்னியின்நிலைமை எவ்வாருகும்? நானே இச்சிறு குடிசையில் பசியால் அலைந்து, வெயிலாலுலர்ந்து, பனியால் நனைந்து காலங்கழிப்பவன். இப்படிப்பட்ட ஏழைபால் உங்கள் அமைச்சர் தமதுபுதல்வியை மணஞ்செய்து கொடுத்தால் அவருக்குத்தான் என்னமதிப்பு? அக்கன்னிகைக்குத்தான் என்ன இன்பநலமுண்டாகலாம்! மகளுக்கு மணமகனைத் தேடுவதென்ருல் ஒத்த வளமும் ஒத்தகுணமும் ஒத்தகுலமும் ஒத்த வயதும் உடையவனையன்றே தேடுதல்வேண்டும். ஒவ்வாத இயல்புடைய என்னிடம் அச்செயலைக் கருதுவது முற்றிலும் விரோதமன்றே! ஆதலால் நீர் என்பால் இரக்கங்கொண்டு எனதுகருத்தை உமது அமைச்சராகிய பலதேவரிடம் அறிவித்து, அடியேன் அவரது கருத்திற்கிணங்க நடந்துகொள்ளமுடியாததற்கு மீண்டும் மன்னிக்க வேண்டுமெனவும் யான் வேண்டிக்கொண்டதாக அறிவிப்பீர்கள் என உரைத்துவிடுத்தனர். தூதரும் தாம்மேற்கொண்ட செயல் முடிவு பெருமையால் மனக்கவற்சியுடன் வழிச்செல்வாராயினர். இஃது இங்ஙனம் இருப்ப, கல்யாணபுரத்தில் பலதேவரது புதல்வியாராகிய கங்காம்பையார், தமது தந்தையார் பசவேசரிடம் மணம்பேசிவருதற் பொருட்டு சங்கமேசத்திற்குத் தூதரையனுப்பியிருக்கும் நிகழ்ச்சியைத் தோழியரால் அறியலாயினர்.

தோழியால் அறிந்த கங்காம்பையார், என்னே எனது நல்வினையிருந்தவாறு! யானெடுத்த மனிதப்பிறவியும் பயனடைவதாயிற்று யான்செய்ததவமோ, என்குலஞ்செய்த தவமோ என்தந்தையாருக்கு இந்நினைவைக்கொடுத்தது! என்து வடிவும் வனப்பும் அவர்க்கே யுரியனவாகுக! யான் உடலாக நிற்க என்னின் அவர் உயிராக விளங்குக! என்பணியனைத்தும் அவர்மகிழும் நற்பணியாகுக! அவ்வுத்தமர் மேற்கொண்டுள்ள உலகியல் சீர்திருத்த நற்பணிகளுக்கெல்லாம் யான் வாழ்க்கைத்துணையாகநின்று உதவுவேனாகுக! என்று எண்ணி நம்பசவேசரையே தமக்கமைந்த கணவராகக் காதலித்தவராகித் தூதரது வரவை எதிர்பார்த்திருந்தனர்.

அமைச்சரும் தூதரது வரவை ஆவலுடன் எதிர்நோக்கினர். தோழியும் அவருக் கணிமையில் வேறொரு தொழிலைச் செய்பவள் போல் உலாவிக்கொண்டிருந்தனள். சங்கமேசஞ்சென்ற தூதரும் வந்தார். பசவேசரது நிகழ்ச்சியையும் எண்ணத்தையும் எடுத்துரைத்தனர். யாதுசெய்வார் பலதேவர்? செய்வதொன்றுமறியாது செயலற்றுத் தம் ஆசனத்திற் சாய்ந்தனர். உணர்ந்த தோழியோ விரைவிற்சென்று அம்மணீ! என்றனள். மனமுதலிய கரணமனைத்தையும் பசவேசர்பாற் செலுத்திச் செயலற்று மஞ்சனத்தின்மேற் சாய்ந்திருந்த கங்காம்பையார் திடுக்கென எழுந்து தோழி! யாது செயல்? என்றார். தோழி அவ்வுத்தமர் மணஞ்செய்துகொள்ள மனமிசையவில்லையாம் என்றனள். அதனைக்கேட்டகங்காம்பையார் என்னேஎனதுதுர்ப்பாக்கியம்! என்றுஏக்கமுற்றவராய் கரைகுறுகவந்தகலங்கவிழ்ந்த நாய்கன்போல் கலக்கமுற்றுக்கண்ணீர்வாரச்செயலற்று வீழ்வாராயினர். உடனே தலைவியின் அசதியை யறிந்த தோழி அம்மணி! யான் என்னறியாமையால் திடீரென்று உங்கட்கு மனக்கவலையை யுண்டாக்கினேன். தூதர் மொழிந்த மொழியனைத்தையுங் கூறாது சுருங்கக்கூறியது எனதுதவறே. பசவேசர் உங்களை மணஞ்செய்துகொள்ள முற்றிலும் இணங்காதவராயினர் என்று எண்ணவேண்டா. அவருக்கும் உம்மிடத்து விருப்பமுண்டு. அவரும் உமது குணநலங்களை யறிந்திருக்கின்றார். ஆயினும் அவரிருக்கும் நிலைமையும் உமக்கிருக்கும் வளமையுமே அவ்வாறு தடைகூற இடையூறாயிருந்தன. அவர் மதியூகியாதலின், நீர் அவரை மணந்துகொள்வதனால் உமக்குத் தம்மால் சுகப்பேறுகிடைக்காதென எண்ணியே அவ்வாறுமறுத்தனர்போலும்

அவரோ மாணவராயினும் துறவறவாழ்க்கையில் வாழ்ந்துவருகின்றனர். அவரும் செல்வக் குடும்பத்தில் பிறந்தனராயினும் ஏழைகளைச் சீர்திருத்தும் நோக்கம் ஒன்றனையே கொண்டு அவற்றை வெறுத்து நிற்கின்றனர். அவர் படுப்பது பழம்பாய். இருப்பது சிறு குடில். உண்பது குருப்பிரசாதம். உரைப்பதோ ஏழைகட் குபதேசம். நாடுவதெல்லாம் நாட்டாரது நன்மையே. தந்நலம்பேணுத் தகைமையாளர். பிறர்நலம்பேணும் பெற்றியாளர். நீரோ இருப்பது அரண்மனை. படுபது அன்னச்சிறகாலமைந்த அணிபெறு மஞ்சனம். இன்னலென்பது இன்னதென்றறியாது மந்தார மலர்போல் மணமரு துவளர்கின்றீர். சுகம் என்பது ஒத்த வளமுடையாரிடத்தன்றோ? அவர் பணத்தை நாடார் குணத்தை நாடுவர். இன்னும் நாள்தோறும் ஊரூராய்த் திரிந்து ஏழைமக்களது சிறு குடிசையில் தங்கி உபதேசித்துவரும் உழைப்பாளியாகின்றனர். அனிச்சமென்மலரினும் மென்மையனவாகிய உமது திருவடிகள் அவருடன் ஊர்தோறுந் திரிந்தலைய உதவுவனவாகுமா? இவற்றையெல்லாங்கருதியே அவர் மறுத்துவிட்டனர்போலும், என்றனள்.

அதனைக்கேட்ட கங்காம்மையார் புன்னகைகொண்டு 'தோழீ! இத்துணைக்காலம் என்னுடனுறைந்து பழகியும் எனதுமனக்கருத்தை இன்னும் அறிந்திலைபோலும்! நற்குலத்திலுதித்த சற்புடை மங்கையர்க்கு ஒருவர்பால் காதலுண்டாவது ஊழ்வலியினாலன்றோ! அக்காதலுக்கு மாறுபாடுமில்லை அழிவுமில்லை. மனமொத்த காதலர் எவ்விடமிருந்தாலென்ன? எந்தநிலைமையிலிருந்தாலென்ன? உண்மைத்தோழீ! என் எண்ணமனைத்தும் ஊழ்வலிகூட்ட அவர்பால் பதிந்துவிட்டன. இனி அவரது அன்பே எனக்கரண்மனையாவதன்றி இப்பொழுதிருப்பது அரண்மனையாகுமா? கணவரது பாதசேவையில் ஈடுபட்ட கற்புடை மங்கையர்க்குத் துன்பமென்ப தொன்றுண்டா? அவரது பாதசேவைக்குத் தடையுண்டாங்கால் துன்பமேயன்றி வேறின்று. அவரது ஆணைவழிநிற்பதே கடவுள் வழிபாடு. அவருவப்ப இன்பமூட்டுவித்தலே பேரின்பம் என்பதை நீ யறியாயோ? இனி என்னுடைய மனம் இருபொருளைப்பற்றாது. அவ்வுத்தமரது பாதசேவையில் ஊன்றிநின்றது. அவர் குணமும் யான் குணியுமாவேன். அவர் உயிரும் யான் உடலுமாவேன். எனது மனம் இனி வேறொருவரைக் கனவிலும் நாடாது' என்று கூறிக் கவலையுறுவாராயினர்.

தலைவியின் உள்ளக்கருத்தைபறிந்ததோழி 'பசவேசரை எப்படியாவது இணங்கச்செய்வதயேன்றி வேறு உபாயம் இல்லையெனத் தனக்குள்தேறி, பலதேவர்பாற்சென்று வழிபாடுசெய்துநின்று அரசே! நமது கங்காம்பையாரது உள்ளம் சங்கமேசராலயத்திற்றங்கும் புங்கவராகிய பசவேசர்பால் ஈடுபட்டது. அவ்வுத்தமரையே மணப்பதாக உறுதிகொண்டுள்ளார். ஊழ்வழிச்சென்ற நங்கையின் உள்ளத்தை இனித்திருப்பமுடியாது. இனித்தாங்கள் அவரை இணங்குறச்செய்வதற்கானமுயற்சியில் நிற்கவேண்டும்' எனக்கன்னிகாமாடத்தில் நடந்த சம்பாஷணைகளையெல்லாம் விளங்கவுரைத்தனள்.

தோழியின் மொழியைக்கேட்ட பலதேவர் சற்றுநேரம் தமக்குள் ஆராய்ந்து தெளிந்து அரண்மனைப் புரோகிதரை அழைப்பித்தனர். புரோகிதரும் அமைச்சரும் தனிமையில் சிறிதுநேரம் ஆலோசித்தனர். முடிவாகப் புரோகிதர், பசவேசரது குருவாகிய ஜாதவேத முனிவரிடம் சென்றுவருவதாக விடைபெற்றுச் சென்றனர். முனிபுங்கவரும் புரோகிதருடைய வரவைக்கண்டு மனமகிழ்ந்து முகமன் கூறி உபசரித்தனர். புரோகிதர் கருத்தையுணர்ந்த முனிவர்பெருமான் தமதன்பிற்குரிய மாணவரை வரவழைத்தனர். வந்த பசவேசரும் ஆசாரியர்க்கும் புரோகிதர்க்கும் வழிபாடியற்றி அச்சமும் அன்புமுடையவராய் ஒருபக்கல் ஒதுங்கிநின்று அடியேனை வரவழைத்த காரணம் யாதென வினயமாக வினவிநின்றனர். ஆசாரியர் புரோகிதரை நோக்கினர். புரோகிதர்,— பசவேசரைநோக்கி, 'குணநிதியே! உம்முடைய நற்குண நற்செயல்களைக்கேட்டு மகிழாதவர் யார்? உம்மைப் பொதுவாக யாரும் நேசிக்க விரும்புகின்றனர். விச்சலமன்னன் அமைச்சராகிய பலதேவர்நற்குணமும் நல்லெழிலும்படைத்ததம்புதல்வியின் பருவநிலையுணர்ந்து தக்கதோர் மணாளனைத்தேடினர். கருத்திற்கிணங்கிய காளையைக் காணப்பெறாமையால் கவலைக்கடலில் ஆழ்ந்திருக்கின்றனர். நீரோ இப்பொழுது அவ்வமைச்சரை அக்கடலினின்றும் ஏற்றித் திருமணக்காட்சி என்னும் இன்பக்கரையில்சேர்ப்பிக்கும் மரக்கலமாக இருக்கின்றீர். பலதேவர் தம்புதல்வியாகிய பொன்மலருடன் நறுமணமாகிய வும்மைச் சேர்ப்பித்து மகிழப் பெரிதும் அவாவுகின்றனர்' என்றனர்.

பசவேசர், ஐயா! தங்கள் கருணைக்கு மகிழ்கின்றேன். தூதர் பால் என்உண்மைக்கருத்தையெல்லாம் முன்னரேதெரிவித்துள்ளேன்.

புரோகிதர், உலகின்புறக்காணும் உத்தம! தூதரும் அறிவித்தனர். அமைச்சரது புதல்வியாரும் தோழியால் தூதரது மொழியினின்றும் உமது கருத்தையுணர்ந்தனர். ஆனால் உமது இருப்பிடம் எதுவாயினும் அதுவே அவர்க்கு அரண்மனையாம் ; உமது வாழ்க்கையே அவர்க்கு இன்பவாழ்க்கையாம். அந்த குணவதியின்மனம் ஊழ்வலிகூட்ட உம்மிடம் சார்ந்தமையால் தம்முடையமனம் வாக்குக் காயங்களாலாகும் பணியனைத்தையும் உமது சேவைக்கே உரியனவாக்க உறுதிகொண்டுள்ளார். இனி அவரது நாட்டம் கனவிலும் பிறரை நாடாது.

பசவேசர், ஐயா ! இஃதென்ன வற்புறுத்தலாயிருக்கின்றது, அப்பெண்மணியின் காதலுக்கு யான் பாத்திரமானவனா ? என்னினும் உத்தமக் காளையர்பால் காதல்கொள்வதன்றோ செல்வச்சீமாட்டியர்க்கு அழகாகும். என்மனமோ உலகவாழ்க்கையில் சிறிதும் செல்லவில்லை. பலவகைப் பிறவியினும் மானிடப்பிறவியை எடுப்பதோ அரிது. அப்பிறவியை யளித்த கடவுள்பால் செய்ந்நன்றிமறவாது அவர் மகிழும்படித் தனக்கெனவாழாது பிறர்க்கென வாழ்வதன்றோ எம்போல்வாரதுகடமை. உடம்பு சதியாகத் தான் பதியாக நின்று உலக விடயங்களை யுண்டுழலாது, மனமடங்கிய தானேசதியாக உடல் முதற்பொருள்களை யுதவிய உத்தமனாகிய கடவுளைப் பதியாகக்கொண்டு அப்பெருமான்பால் நித்திய இன்பத்தினை நுகர்வதன்றோ உண்மையான சதிபதி வாழ்க்கை.

புரோகிதர்,—பரோபகாரத்தில் தம் வாழ்க்கையைக் கழிப்பது தான் உத்தமர்க்கழகு. "இல்வாழ்வானென்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றினின்றதுணை" என்ற பெரியார் கருத்தின்படி தக்க குணவதியை வாழ்க்கைத்துணையாகக்கொண்டு இல்லறத்திலிருந்தே பல நல்லறங்களைச் செய்யலாமே ?

பசவேசர்,— பெரியீர் ! சம்சாரபந்தமோ மிகப்பொல்லாது. தொடங்குங்கால் இன்பம்போலிருந்து பின்பு பெரிதும் துன்பத்தை விளைவிக்கும். இல்லறவாழ்க்கையில் அகப்பட்டாரை ஒவ்வொன்றாகப் பலதுன்பப்பேய்சூழ்ந்து பெருந்துன்பம் விளைவிக்கும். துறந்தாரைப்போல், அதில் அகப்பட்டவரால் அவ்வளவு உபகாரச்செயல் செய்யமுடியாது. என்னுடைய அருமருந்த காலத்தைச் சுயநலத்

செலவழிக்க யான் கருதவில்லை. யானோ இப்பொழுது என்னளவில் யாதொரு கவலையுமின்றியிருக்கிறேன். கருணைகூர்ந்து அடியேனைப் பந்தத்தில் ஆழ்த்தாது குருசேவையிலேயே நிற்க உத்திரவளியுங்கள். விரித்துரைப்பானேன் ? இல்லறமிருக்கட்டும். துறவறந்தானென்ன? அறிவிற்சிறந்தாரொருவரை மடாதிபதியென்று பட்டஞ்சூட்டி இடம் பொருள் ஏவல்களைக்கொடுத்து அவற்றைக்கண்காணிக்கும்படி விட்டு விட்டால் போதாதா ? அவருக்கு ஆத்மபூசை எங்கே ? தியான மெங்கே சமாதியெங்கே ? நிலையானபற்றேற்பட்டால் பரோபகாரம் பறந்தோடிப்போகுமன்றோ! பற்றற்றார் கண்ணே பதிப்பொருள் விளங் கும். நூலியற்றும் நூண்ணறிவுமுன்னிற்கும். எல்லோரையும் ஒப்பக் காணும் உயர்ந்ததோர் அறிவு தலைப்படும். அந்தோ ! என்னிலையறி யாது உங்கள்முன் பலப்படப் பேசிவிட்டேன் மன்னியுங்கள்.

இருவர் வினவிடையையும் கேட்டுக்கொண்டிருந்த ஜாதவேத முனிகள், பசுவ ! நிதானித்து முடிவுபோக ஆராய்ந்துபார்.

பசவேசர், ஆசாரியர்பெரும ! இதைப்பற்றிய ஆராய்சி இப் பொழுதன்று ; முன்னரே முடிவுசெய்துள்ளேன்.

ஜாதவேதமுனிவர்,— உத்தமமாணவ ! அரண்மனை யென்பது கவலையின்றி களித்தற்குரியஇடம். அங்கு உன்கருத்திற்கேற்பப் பலர் ஏவல் செய்வார். உன்வாழ்க்கையை இன்பமாகக் கழிக்கலாமே?

பசவேசர்,—என் அகவிருள் கடிந்த அருட்பெருங் குருவே! இந்நாட்டில் பல்லுயிரும் பற்றுக்கோடின்றிப் பதைப்புற்றுநிற்க அவற்றுள் ஒன்றாகிய யான்மட்டிலும் அரண்மனையில் வாழலாமா ? என்னாலான பணியைப் பிறர்க்குச்செய்து உடம்பாலாய பயனைப்பெறு வதாயிருக்கப் பிறர் ஏவலையும் ஏற்றுக்கொள்ளலாமா ? தங்கள் பாத சேவையே என்றுங் கிடைக்குமாறு அருள்புரிக.

ஜாதவேதமுனிவர்,— அன்பின்நிலையமே ! நீ கூறுவதெல்லாம் உண்மையே. உன்மனப்பான்மை பளிங்கினுந் தெளிவுற்றிப்பதைக் காணப் பெரிதும் மகிழ்கின்றேன். ஆயினும், இந்நாட்டில்வாழும் மக் களைச்சீர்திருத்தி மகிழ்விக்கவேண்டுமென்பததானே உனதுநோக்கம்?

பசவேசர்,— சுவாமி ! ஆம் அதுதான் வேறொன்றுமில்லை.

முனிவர்,— 'மெய்யன்ப! இந்நாட்டில்வாழும் பலரும் உன்னன்பிற்குப் பாத்திரர்கள்தானே? பலதேவரும் அவர்களுள் ஒருவர்தானே? அவர் பெருஞ்செல்வராயினும் உன்னால் தம் கவலையைப் போக்கலாமென்றுதானே கருதுகின்றனர்? அவரது புதல்வியாகிய கங்காம்பையும் ஊழ்வினைவயத்தால் உன்பால் காதல்கொண்டு தன்னாலான பணியை யெல்லாம் உனக்கே உரியனவாக்கி வாழ்க்கைத்துணையாயிருந்து இன்பநுகர உறுதிகொண்டிருக்கின்றனளே. கற்புடைப் பெண்டிரதுமனம் பிறிதொரு பொருளை நாடாதல்லவா? நீ மறுப்பாயானால் அவள் உயிர்துறக்கவும்நேருமே? எல்லோருடைய இன்பத்தை நாடும் நீ அவ்விருவருடைய இன்பத்திற்கும் இணங்கவேண்டியதுதானே முறை? அன்றியும் ஓர்நாடும், ஓர் அருள்நெறிச்சமயமும், ஓர் அறமும் சிதைந்துநிற்கின்றகாலத்தில் சிவபெருமான் நித்தியவிபூதிகளாகிய அணுக்கத்தொண்டருள் ஒருவரை இவ்வுலகத்தில் அவதரிக்குமாறு அருள்புரிவர். இப்பொழுது கர்நாடகதேயமும், வீரசைவ சமயமும், இல்லறமாகிய நல்லறமும் நிலைகுலைந்து உயிர்துறக்குந் தருணத்திலிருக்கின்றன. அவற்றைப் பிழைப்பிப்பதற்கே சஞ்சீவியாக உன்னை அவதரிக்கச்செய்திருக்கின்றனர் கடவுள் என எண்ணுகின்றேன். அதனுற்றான் சில சுபசகுனங்களும் காணப்பெறுகின்றன. கூர்ந்துநோக்கினால் உண்மையெனத் தோன்றவில்லையா? ஆதலின் இந்நாட்டையும், வீரசைவ சமயத்தையும், இல்லறத்தையும் சீர்திருத்த வேண்டியே பலதேவருடைய புதல்வியாகிய குணவதியை மணந்து வாழ்க்கைத்துணையாகக்கொண்டு, வீரசைவ சமயத்தின் உண்மைத் தன்மையை யாவரும் மேற்கொள்ளுமாறு உலகெங்கும் பரப்பி இந்நாட்டினரையேயன்றி எந்நாட்டினரையும் இன்பவாழ்வை நுகரச்செய்தற்காகவே கங்காம்பையை மணந்து கங்காதரனைப்போல் நித்திய மங்கள மணமகனாகுக. நீ வேண்டும்போதெல்லாம் வேண்டியவுதவிகளை "வேண்டுவார்க்கு வேண்டுவதே யீவானாகிய இறைவன் உன்னுடனிருந்து உதவிபுரிவாராக.' என்றருள்மொழியாகக் கூறினர்.

பசவேசர்,— என்பவப்பிணி யகற்றுந் தவப்பெரு மருந்தே! யான் மறுப்பது என்னை? எனது உடல் பொருள் ஆவியனைத்தும் உமக்கற்பிதமாயினவல்லவா! அவற்றை வேண்டும் பணியிற் செலுத்துக. எல்லாம் குருவாணையே என்றிணங்கிநின்றனர்.

அதனையுணர்ந்த புரோகிதர் மிகமகிழ்ச்சியுடையராய் முனிவரை வணங்கி வாழ்த்துரைபெற்றுக் கல்யாணபுரியை அடைந்தனர். புரோகிதர் சென்ற நாள்முதல் ஊணுறக்கமின்றிச் செயலற்றுநின்ற கற்புடைநங்கை முகமலர்ச்சியுடன்வந்த புரோகிதருடைய நல்வரவைத் தோழியாலறிந்து, கடலகத்தே புணையின்றித் தவித்தாெனாருவன் துணைபுரியவந்த தோணியைக்கண்டு மகிழ்ந்தாற்போல் உயிர்ப்புடன் ஊணர்வுதோன்ற தன்வழிபடு கடவுளை வாழ்த்தினாராக.

பசவேசரது கட்டளைப்படி கல்யாணபுரியில் மணமகள் முதலியோர்க்கு இலிங்கதாரண தீக்ஷைசெய்வித்து வீரசைவ சித்தாந்த விவாகமுறைப்படி கல்யாணத்தை நடத்துதற்கான ஏற்பாடுகள் செவ்வனே நடைபெற்றன. பலதேவரால் அறிந்த விச்சலமன்னனும் உவப்புடன் எதிர்பார்த்திருந்தனன். நகரெங்கும் நவநவமாகப் புதுக்கப்பட்டது. விச்சலன்நகரம், சூரனைத்தடிந்த முருகப்பெருமான் தெய்வயானையை மணப்பவருதலைக்கருதி இந்திரனால் அழகுபடுத்தப்பட்ட திருப்பரங்குன்றமெனப் பொலிவுற விளங்கியது. நம்பசவேசரும் அன்பர்குழாங்களுடன் முதல்நாளே கல்யாணபுரிக்கேகினர். அவரது வருகையை யுணர்ந்த பலதேவரும் அரசனது ஆணையால் பல விருதுகளுடனும் வாத்தியகோஷத்துடனும் எதிர்கொண்டழைத்தனர். கட்டழகமைந்த காளையைக் காணவேண்டி நெருங்கிய எண்ணிறந்த மக்களுடைய கண்ணாகிய தாமரைக்காட்டிடையே நம் இளவேறனைய வள்ளல் உலாப்போந்து விடுதியை யடைந்தனர். கல்யாணபுரி என்னும் ஆடை, பரசிவபக்தியால் வெண்ணிறமடையவேண்டிச் சமணமாசாகிய உவர்பிடித்திருந்தாற்போலிருக்கும்அந்நானில் அடியவர்செல்வமெனும் வசவேசரது வருகையை அறிந்த விச்சலமன்னன், மந்திரியென்று மறைந்த வுட்பகையாகிய வசவரைப் பொடிமூடிய தழலை வெம்மையான தீயென்றறியாது எடுப்பக் கைநீட்டுதல்போல் எதிர்கொண்டழைத்து ஆசனத்தமர்த்தி உபசரித்து அவரால் நேர்ந்த அற்புதச் செயலைக்கண்டு வியந்து மகிழ்ந்து பலசிறப்புகளுடன் மந்திரிக்கிழமையும் கொடுத்து என்னைத் தாய்போலிருந்து காத்தருள்க என வேண்டிநின்றனன்.

குறித்தநாள் காலையில் சங்கமேசத்திலிருந்து வந்திருந்த பஞ்சகணதீசர்களால் இலிங்கதாரணதீக்ஷாசமஸ்காரங்களெல்லாம் விதிப்படி செவ்வனே செய்யப்பெற்றன. பின்னர் முகூர்த்தகாலமும் நெரு

ங்கியது. திருமணத்திற்கென்று வந்திருந்தாரெல்லாம் பேராவலுடனும் பெருமகிழ்ச்சியுடனும் எதிர்பார்த்திருந்தனர். மணமக்களுக்குரிய திருமஞ்சனமாட்டல் முதலிய வைதிகக் கிரியைகளும், ஆடையணியால் அலங்கரித்தல் முதலிய லௌகிகக் கிரியைகளும் பணியாளர்களால் உரியகாலத்தே செய்விக்கப்பெற்றன. பசவேசர் தாங்கொண்ட நோக்கத்திற்கு ஈதோரிடையூறுமோ? இறைவனருள்உடனின்றுதவுமோஎனக்கவலைகூர்ந்து திருவருளைநாடிநின்றனர். மணமகனையும் மணமகளையும்தோழர்களும்தோழியரும்இயற்கையழகைமறைத்துகண்ணெச்சில்போக்குவார்போன்று ஆடையணிகளால் அலங்கரித்து மணமேடையில் தக்கதோராசனத்தில் அழைத்துவந்து அமரச்செய்தனர். மாகேசர்களால் வைதீகக்கிரியைகள் நடைபெற திருக்கல்யாணமகோற்சவம் சிறப்புற நடைபெற்றது. வேண்டுவார்க்கு வேண்டிய தானங்கள் வழங்கப்பெற்றன. மணக்கோலங்காணவந்தாரனைவர்க்கும் அறுசுவையுண்டி அமர்ந்தளிக்கப்பெற்றன. அவ்விச்சலநகரத்தை அன்றுதொட்டு இன்றளவும் கல்யாணபுரம் என்று உரைப்பாராயின் அத்திருமணத்தின் சிறப்பு யாரால் சொல்லுந்திறத்ததாகும்! இங்ஙனம் திருமணச்செயல் நடைபெற்றது.

(தொடரும்)

சிவசர்வோத்தமத்வம்.

ஆஸ்தான வித்துவான், சிரசி. குருசாந்தசாஸ்திரிகள், மைசூர்.

“யதாதமஸ்தந்நதிவா நராத்திர்நசாஸச்சிவ ஏவகேவலம்” “ஏக ஏவருத்ரோ நத்விதீயாயதஸ்தே” “உமாஸகாயம் பரமேஸ்வரம் ப்ரபம்” இவை முதலிய அநேக வேதோபநிஷத் வாக்கியங்கள் சிவனே அநாதி மூர்த்தி யென்றும், அவனே பரப்பிரமமென்றும், சக்திவிசிஷ்டனென்றும் சாதிக்கின்றன. சக்திவிசிஷ்டனான அந்தப்பரசிவமூர்த்தியினாலேயே சராசரமாகிய உலகம் படைக்கப்பட்டிருக்கிறதென்று முக்காலமுணர்ந்த முனிவர்கள் தத்தம்நூல்களில்எடுத்துரைத்திருக்கின்றார்கள். விஷ்ணு, பிரமன், இந்திரன், குபேரன் முதலிய தேவர் சிவபெருமானுடைய உபாசனையினாலேயே தமக்குக் கிடைத்துள்ள மேலான தானங்களை

அலங்கரிக்கின்றனர் என்று வியாசமகரிஷி தாம் எழுதியுள்ள ஸ்காந்தாதி புராணங்களில் எழுதியுள்ளார். எல்லாத்தேவர்கட்கும் சிவனே உபாஸ்யமூர்த்தியாயிருப்பதால் அச்சிவனுக்கே 'மகாதேவன்' என்ற நாமம் அன்வர்த்தகமாக கிடைத்திருக்கின்றது. பண்டைக்காலத்தில் பரதகண்டத்திலிருந்த யோகிகளும் சக்கிரவர்த்திகளும் மனிதர்களும் சிவனே சர்வோத்தமனென்று நம்பி அவருடையஉருவமான சிவலிங்க மூர்த்திகளை ஒவ்வோரிடத்திலும்தாபித்து அவருடையஉபாசனையைக் களங்கமற்றபக்தியினாற்செய்து கைவல்யசுகத்தை அனுபவித்துள்ளார்கள். முற்காலத்திய இருடிகளைப்போல் சிவலிங்கத் தாபனஞ்செய்வோர் இக்காலத்திலில்லை. பூசைசெய்பவருமில்லை.

உலகமறிந்த வியாசமுனிவர் ஆதியில் விஷ்ணுபக்தனாகி விஷ்ணுவே தேவோத்தமனென்று சாதிக்க காசியம்பதிக்கண்வந்து விஸ்வநாதராலயத்திலும் " நதேவ: கேசவாத்வர:" என்று விஷ்ணுவினுடைய ஆதிக்யத்தைச் சாதித்து நந்திகேஸ்வரரால் கைதுணிக்கப்பட்டு விஷ்ணுவினாலேயே சிவசர்வோத்தமத்தைத் தெரிந்துகொண்டு சிவபெருமானைத் தியானித்துத் துன்பத்தினின்றும் விடுபட்டு கங்காதீரத்தில் தனதுபெயரால் சிவலிங்கமொன்றைத் தாபித்துப் பூசைசெய்து சிவநிந்தையால் சேர்ந்த பாபத்தை நீக்கிக்கொண்டதாகத் தானே காசிகாண்டத்தில் விளக்கமாக எழுதியுள்ளார். அது இப்பொழுதும் 'வியாசேஸ்வரம்' என வியாசகாசியில் விளங்குகின்றது.

அஷ்டமாசித்திகளைப்பெற்று முனிவர்பெருமானாக விளங்கும் அகத்திய முனிவரும் தம்பெயரால் ஓர் சிவலிங்கத்தைத் தாபித்துச் சிவோபாசனையினால் கடல் குடித்தல் முதலிய அற்புதச் செயல்களைச் செய்து புகழ்பெற்று விளங்குகின்றனர். அதுவும் ' அகஸ்தியேஸ்வரம் ' என்ற பெயரால் அக்காசியின்கண் விளங்குகின்றது. இவையன்றியும், கௌதமர், கஸ்யபர், கபிலர், மார்க்கண்டேயர், வசிஸ்டர், விசுவாமித்திரர் முதலியோர் தத்தம் பெயரால் சிவலிங்கங்களைத்தாபித்து நித்தியசுகத்தையடைந்திருக்கின்றனர். அந்த லிங்கங்கள் இப்பொழுதும் கௌதமேஸ்வரம், கபிலேஸ்வரம், மார்க்கண்டேயேஸ்வரம் வசிஸ்டேஸ்வரம், விஸ்வாமித்திரேஸ்வரம் முதலிய பெயரால் காசியின்கண் விளங்குகின்றன. விஷ்ணு தசாவதாரங்களினும் சிவலிங்கபூசை செய்து வேண்டுவதொன்றனைப் பெற்றாரெனப் பல புராணங்களில் காணப்படுகின்றது. இராமாவதாரத்தில் பூசிக்கப்பெற்ற இராமேஸ்

வ்ரமே இதற்குத் தக்க சான்றல்லவா? மச்சாவதாரத்தில் தாபித்த 'மச்சேஸ்வரம்' என்ற மகாலிங்கம் இலங்காபட்டணத்தில் விளங்குகின்றது. மற்றொருசமயத்தில் கடல்நிற வண்ணராகிய நாராயணர் ஆயிரந்தாமரையில் ஒன்று குறைய சிவார்ச்சனைக்கு இடையூறு நேரா வண்ணம் தம் கண்களில் ஒன்றையிடந்து மறைச்சிலம்பு அரற்றும் மலரடிக்கணிந்து சக்கராயுதம் பெற்றமைபால் பருதிகொடுத்த சுருதி நாயகன் (சக்கரேஸ்வர்) எனச் சிவபெருமான் புகழப்பெறுவதும் ஆகிய பிறவற்றானும் சிவபெருமானே யாரினும் சிறந்தோர் என்பது துணியக்கிடக்கின்றது. இதனால், பிரமனாதி தேவர்களும் சிவபெருமானைப் பூசித்து, தரிசித்து இணையற்ற சுகத்தை அடைந்துள்ளாரென அறிகின்றோம். பிரமனாதி தேவர் சிவலிங்கத்தைப் பூசித்தலேயன்றி எப்பொழுதும் சிவசம்பந்தம் தமது சரீரத்திலும் இருத்தல்வேண்டுமெனக்கருதி சிவலிங்க மூர்த்தியைச் சரீரத்தில் தாரணஞ்செய்து கொண்டிருக்கின்றனரென அறநூல்கள் கூறுகின்றன. இதற்கு "விஷ்ணுப்ரஹ்மாத்யோதேவா முநயோ கௌதமாதய:" தாரயந்தி சதாலிங்கம் உத்தமாங்கே விசேஷத: இத்தகைய சுலோகங்களே பிரமாணங்களாகின்றன. இன்னும் இதற்கு உலகப்பிரசித்தியான பண்டரிபுரத்தில் 'விடோபா' என்னும் பெயர்வாய்ந்த விஷ்ணு மூர்த்தியின் மஸ்தகத்திலும், பார்சிபட்டணத்திலிருக்கும் 'பகவந்தன்' என்னும் விஷ்ணு மூர்த்தியின் சிரத்திலும் காணப்பெறும் சிவலிங்கதாரணமே பலமான சான்றாகின்றது. சிவாஜி மகாராஜனுடைய குருவாகிய துகாராம் அவர்கள் தமது கீதாகிரந்தத்தில் "விடோபாச்யாமஸ்தகீலிங்கதாரண" என்று எழுதியிருக்கின்றனர். பண்டரிபுரத்திலுள்ள விடோபா மூர்த்தியும், பார்ஸி பட்டணத்திலுள்ள பகவந்தமூர்த்தியும் மிகப் பழமையான காலத்தில் தாபிக்கப்பெற்றனவே.

இதனால் முற்காலத்தில் தாபிக்கப்பெற்ற எந்ததேவதைகளின் சிரத்திலும் சிவலிங்கதாரணம் இருக்கிற விஷயம் சொண்டூர் குமாரசுவாமி (சுப்பிரமணியர்) துளஜாபுரம், பவானி, குட்டாபுரம் தானம்மை முதலிய தேவதைகளினாலும் வெளியாகின்றது. இத்தகைய காரணங்களை ஆராய்வதிலிருந்து சிவனே சர்வோத்தமன் என்றும், சிவார்ச்சனை, சிவலிங்கதாரணம் ஆகியவற்றாலேயே சகல சித்திகளும் கிடைத்திருக்கின்றன என்றும் வெளியாகின்றது. இக்காலத்தில் தேவோத்தமனாகிய சிவபக்தி நாளுக்குநாள் குறைந்து நாஸ்திகத்துவம் தலை

யெடுத்துவருவதைக்காண மிகவுள நடுக்கத்துடன் கவல்தற்கிடமாகின்றது. சிவலிங்கதாரணஞ்செய்துள்ளவர்களும் அதன் பெருமையையறியாது சிவார்ச்சனையின்றிக் கண்டவாறு நாவிற்கடிமைப்பட்டு உணவினையுண்டு உடலைவளர்க்கக்கருதுகின்றனர் ! இங்ஙனம் சிவபெருமானை மறந்து உடலைவளர்த்தாலும் சிறிதுகாலமேனும் நிச்சயமாகஉடலினின்றும் உயிரைப்பிரிக்கும் கூற்றுவன் இவர்களை மறந்துவிடுவனோ? அந்தோ இவர்கள் அறியாமையென்னே ! இவற்றையெல்லாம் ஊன்றி யோசித்துச் சிவார்ச்சனைசெய்து சிவலிங்கத்துக் கற்பிதமான சிவ நிர்மாலியப் பிரசாதத்தையே யுண்டு சிவபக்தியுடையராகவேண்டுமெனத் திருவருளை வேண்டுகின்றேன்.

கர்ப்பலிங்கதாரணம்.

ஸ்ரீவீரசைவ சமயாசாரியர்களால் வேதாகம விதிக்கிணங்க வீரசைவர்கட்கெனச் சிறப்பாக விதிக்கப்பெற்ற சமயாசார சமஸ்காரங்களுள் கர்ப்பலிங்கதாரணம் முக்கியமானதொன்று. அதாவது, வீரசைவர்கள் தமது தர்மபத்தினியாகிய மனைவிமார் கருப்பந்தரித்த எட்டாவது மாதத்தில் கருப்பையிலிருக்கும் சிசுவிற்கு குருமுகமாக விதிப்படி சிவலிங்கதாரணஞ்செய்விப்பது. கருப்பையில் பிண்டரூபமாயிருக்கும் சிசு எட்டாவதுமாதத்தில் உயிர்த்தன்மையை அடைகின்றது. சிவசம்பந்தமுடைய தாயின் கருப்பையிலிருப்பதாயினும் உயிர்த்தன்மைபெற்றவுடன் மந்திர பூர்வகமாகச் சிவசம்பந்தத்தைப்பெறுதிருக்குமாயின் அச்சிசுவும் பவியென்றே கருதப்படும். அதன் தாயும் பவிசம்பந்தமுடையளாவள். அவள்பால் உணவு முதலியவற்றையுண்ணும் ஆண்மகனும் பவியாவன். எப்பொழுதும் வீரசைவர்கட்குப் பவிசம்பந்தங்கூடாதென விதிக்கப்பட்டிருத்தலால் கர்ப்பலிங்கதாரணம் இன்றியமையாததெனக் கருதப்படுகின்றது. இதுபற்றியே வீரசைவ மதத்தாபகராகிய ஸ்ரீபஞ்சாசாரியர்கள், தாயின் கருப்பத்திலிருக்கும் சிசுவிற்கு எட்டாவது மாதத்தில் இலிங்கதாரணஞ்செய்யவேண்டுமென்றும், சிசு எப்பொழுது பிராணனையடைகின்றதோ அப்பொழுதே பஞ்சசூத்திர சகிதமான சிவலிங்கத்தைச் சமஸ்காரமுறையாகப் பூசித்துக் கருப்பிணியின் வசத்தில்கொடுத்து, சிசுபிறந்தவுடன் அச்சிவலிங்கத்தையே தரிக்கவேண்டுமென்றும் போதித்திருக்கின்றார்

கள். "வீரசைவ ஸ்திதாநாஞ்ச ஸ்த்ரீணாங் கர்ப்பாஷ்டமேகுரு:, அர்த்தோதயேவாப்யதவா பதநேச் சைவதேசிக:, பூர்வசம்ஸ்காரிதம் லிங்கம் விஸோ : கண்டேச தாரயேத்" என்று ஸ்வாயம்பு வாகமத்தில் கூறப்பட்டுள்ளது. இங்ஙனமிருப்பச் சிலர் குழந்தைபிறந்த பதினோராநாள் செய்கின்றனர். இன்னுஞ் சிலரோ மதவுண்மையையறியாது மூன்று நான்குமாதங்கட்குப்பின்னரும் நேர்ந்தபொழுது செய்கின்றனர். மற்றொரு சாரார் நேர்ந்தபொழுது இரண்டொருவர் மாத்திரம் செய்துகொண்டு தாரணமில்லாதவருடன் உடனுறைந்து உண்கின்றனர். வேறுசிலர் தீக்ஷா சமஸ்காரத்தையும் தம்புதல்வர்க்குப் பத்துவயதுக்குள் செய்துவைக்காமல் கல்யாணத்தைச் செய்து திரியவிடுகின்றனர். அப்புதல்வரும் இரண்டொரு குழந்தையுண்டானபின்னர் ஒரே செலவிற் செய்துவிடலாமென வுறங்குகின்றனர். இவையனைத்தும் சுத்த சாம்பிரதாயத்திற்கு விரோதமென அறிஞர் அறிவாராக.

வடநாட்டு நிகழ்ச்சி.

கர்ப்பலிங்கதாரணம்.

குளேதகட்டம், திரு. கவி சித்தப்பா அவர்கள், ஓணரோடி, திரு. குருசாந்தப்பா அவர்கள் இந்த பக்தசிகாமணிகளும் 12-10-29ல் தத்தம் தர்ம பத்தினிமார்களுக்கு எட்டாவது மாதத்தில் ஹிரேமடம் ஸ்ரீபட்டாத்யக்ஷசுவாமிகள் தலைமையின்கண் அஞ்சிகமடம் குருபாத சர்மா அவர்கள் புரோகிதஞ்செய்ய கர்ப்பலிங்கதாரணஞ்செய்வித்துச் சமயாசார சீலர்களாயினரெனக் கேள்வியுற்று மகிழ்கின்றோம்.

அறிந்தமதாபிமானி.

சமஸ்கிருதவைதிகபாடசாலஸ்தாபனம்.

பல்லாரி ஜில்லா ஹூவ்வினஹடகலி தாலூகா மானிஹள்ளியில் புரவர்க்கத மடம் ஸ்ரீபட்டாத்யக்ஷமலீசுவாமிகள் அவர்கள் முயற்சியால் வீரசைவ மாகேஸ்வர மாணவர்களுக்காக 10—11—29-ல் 'ஸ்ரீபஞ்சாசாரிய சமஸ்கிருத வைதிக பாடசாலை' என்ற பெயரால் ஒன்று தாபிக்கப்பெற்றது. இதற்குத் தக்க தலைவரும் உபாத்தியாயரும் நியமிக்கப்பெற்றுள்ளார். இது ஒரு கமிட்டியின் விசாரணையில் நடைபெறுமாம். நன்கு நிலவுக. பஞ்சாசாரியப்பிரபா.

நல்லதில நெய்யாடி யானிடத் தைந்தாடி
நவையிலை யமுதமாடி
நல்குகா ரணகாரி யம்முறையி னன்றியே
நறுநெய்பா றயிராடியே
மெல்லமலர் மதுவாடி யின்கழைச் சாறாடி
மென்பழச் சாறாடியே
விழையுமிள நீராடி யாரக்கு ழம்பாடி
விதியினமை தபனமாடி
யொல்லைநது வெண்டலைப் புழையினிடை யோடிநல்
லுத்திகோடு பைத்ததலைய
வுரகநுழை வுறவிளங் குழவிமதி யொருபுடை
யொதுங்கவிட மின்றியசைய
வல்லலற நிறைகங்கை யசையாது நிற்பைநீ
யபிடேக மாடியருளே
யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந்தவிறை
யபிடேக மாடியருளே.

(இ - ள்) நல்ல திலநெய் ஆடி - நன்மையாகிய எண்ணெய்யை அபிடேகஞ்செய்து,— ஆன் இடத்து ஐந்து ஆடி - பசுவினிடத்துத் தோன்றும் பஞ்சகவியத்தை யபிடேகஞ்செய்து,— நவை இல் ஐயமுதம் ஆடி-குற்றமில்லாத பஞ்சாமுதத்தை அபிடேகஞ்செய்து,—நல்கு-கொடுத்த (ஒன்றிலிருந் தொன்றுண்டாகிய),— காரணகாரியம்முறையின் அன்றி - காரண காரியமுறைப்படியல்லாது,— நறுநெய் பால் தயிர் ஆடி-நறுமணமுள்ள நெய்யையும், அதன்பின் பாலையும், அதன் பின் தயிரையும் அபிடேகஞ்செய்து,— மெல்லமலர்மது ஆடி - மென்மையான மலரினின்றுந் தொகுக்கப்பெற்ற தேனை அபிடேகஞ்செய்து,— இன்கழைச்சாறு ஆடி - இனிமையான கருப்பஞ்சாற்றை அபிடேகஞ்செய்து,— மென்பழச்சாறு ஆடி - மென்மையாகக் கனிந்த முக்கனி முதலிய பல்வகைப் பழச்சாற்றை அபிடேகஞ்செய்து,— விழையும் இளநீர் ஆடி - விரும்பத்தகும் தெங்கின் இளநீரை அபிடேகஞ்செய்து,— ஆரக்குழம்பு ஆடி - சந்தனக்குழம்பினை அபிடே

கஞ்செய்து,— விதியின் அமை தபனம் ஆடி - ஆகமவிதிப்படி முன்னரே அமைத்துவைத்துள்ள தபனகலசநீரை அபிடேகஞ்செய்து,— நல்உத்தி கொடுபைத்ததலைய உரகம் - நல்ல கரும்புள்ளிகள் பொருந்திய வளைவான படத்தினையுடைத்தாகிய தலையையுடைய பாம்பு,—நகு வெண் தலைப்புழையினிடை - சிரிக்கின்ற வெண்மையாகிய பிரமகபாலத்தின் துளையின்கண்,— ஒல்லை ஓடி நுழைவுற - விரைவிற் சென்று நுழைந்துகிடப்ப,— இளம்குழவிமதி- மிகவும் இளமையாகிய பிறைச்சந்திரன்,— ஒருபுடை - ஒருபக்கத்தாயினும்,— ஒதுங்க இடமின்றி அசைய - ஒதுங்குதற்கு இடமில்லாது அசைவுற்றுநிற்க,— அல்லல் அற - (உலகம்) துன்பத்தினின்றும்நீங்கி இன்பமுறவேண்டி,—நிறை கங்கை அசையாது நிற்பை - நிறைந்த கங்கை அசைவின்றி (நிற்கும்படி அதனைத் தலைமேற் றாங்கி) நிற்கின்றனை,— நீ - (ஆதலால்) நீ,— அபிடேகம் ஆடியருள் - (பிறவித் துன்பத்தினின்றொழிந்து இன்பமுற அடியேனால் ஆட்டப்பெறும்) அபிடேகத்தையும் ஏற்றருள்வாயாக என்றபடி. ‘அறிவுற்றெ.........ஆடியருள்’ என்பதற்கு முன்னருரைத்தாங் குரைத்துக்கொள்க.

இது அபிஷேகங்கொள்ளும் வரன்முறையை விதந்துகூறியதென அறிக. ‘நல்லதிலநெய்’ என மிகுத்துக் கூறியவதனால் தயிலாபிடேகத்துக்குமுன் சாமானிய அர்க்கியநீரபிடேகமும், பின் மா, மஞ்சள், நெல்லி, முள்ளிகளின் அபிடேகமும் செய்யவேண்டுமெனவும், ‘விழையுமிளநீர்’ என மிகுத்துச்சொல்லியவதனால் இளவெந்நீர், குசோதகம், ரத்தினோதகம், சொர்ணோதகம், சகஸ்திரதாராபாத்திர நீர் முதலிய அபிடேகமும் செய்யவேண்டுமெனவுங் கொள்ள இடந்ததென அறிக.

“அல்லலற நிறைகங்கை அசையாது நிற்பை” என்பதற்கு, பகீரதன் தவத்திற்கிரங்கி அவனது துன்பம் நீங்க நிறைந்தகங்கையையேற்று வேண்டும்போது வேண்டியவளவாகக் கொடுத்துதவுதற்கு அசையாது நிற்பாய் எனவும்; நிறைகங்கை - நிறையாகிய கற்புடைய கங்கைக்கு,— அல்லல்அற - (உமாதேவியைப்போல் பிரிவால்நேரும்) துன்பம் நீங்க,— அசையாது - சிரத்தை விட்டுப்பிரிந்து அசைவுறாமல்,— நிற்பை - அவளதன்பிற்கிசைந்து தாங்கி நிற்பாய் எனவும்; என்றும் கங்கையைச் சுமந்தும் அதனால்வரும்பாரம்நீங்க அசைவற்று

நிற்பாய் எனவும்; உரகம் நுழைவுற மதியசைய நிறைந்தகங்கை அலை வீசி யடிக்கவும் அதனால் வருந் துன்பம் நீங்க அசையாது நிற்பாய் எனவும்; அறம்நிறை கங்கை - இல்லற வாழ்க்கையில் நிறைந்த கங்கையை,— அல் அல் - பேரிருளாய் வாராநின்ற சர்வ சங்கார காலந்தோறும்,— அசையாது - கங்காதரன் என்னும் பெயர் நீங்காதபடி,— நிற்பை - தாங்கி நிற்பாய் எனவும்; நிறைகங்கை - என்றும் வற்றாது நிறைகின்ற கங்கையானது,— அல் அலற - பகலிலன்றி இரவிலும் ஒலிக்கவும்,— அசையாதுநிற்பை - தலைநடுக்கமின்றி நிற்பாய் எனவும்; நான் அபிடேகஞ் செய்யும்பொழுது நினது முடியின்மேல் விழும் நீர்த் திரளுக்கஞ்சி உரகம் வெண்டலைப்புழையினிடை நுழைவுறவும் குழவிமதி ஒதுங்க இடமின்றி யசையவும் நேர்ந்த அல்லல் அடியேனால் நேர்ந்ததெனத அறிந்திருந்தும் அல்லல் அற - அத்துன்பம் நீங்க,— நிறைகம், கை அசையாது - வளப்பம் நிறைந்த சிரமுங் கையும் அசையாமல் (சிரக்கம்பமும் கரக்கம்பமும் செய்யாமல்) நிற்பை - நிற்பாய்; அதாவது, வியப்பாலும் வெறுப்பாலும் சிரக்கம்பமும் கரக்கம்பமும் உண்டாமாதலின், நான் ஆகமப்படி அபிடேகஞ் செய்யும் பொழுது வியப்பும் வெறுப்புந் தோன்றுதற்கிடமின்மையின், சிரக்கம்பமும் கரக்கம்பமும் செய்து நிற்பாயல்லை; நாமுரைத்த ஆகம நூல்வழியே அபிடேகம்பண்ணினனென்று ஏற்றுக்கொள்பவனாதலின் என்க. எனவும் கண்ணழித்துப் பொருள்கூறுவாருமுளர். இவற்றுள் ஆசிரியர் கருத்திற்கும் நூலியல்புக்கும் முரண்படாது பொருந்துவனவற்றைக் கொள்ளுதலும், பொருந்தாதனவற்றைக் கொள்ளாதொழித்தலும் ஆராய்ச்சியின்வல்ல அறிஞர்க்குரியவென விடுத்தாம்.

கரதலத்தில் எழுந்தருளியிருக்கும் இட்டலிங்கப்பெருமானே! நீ, அடைக்கலமாகப்புகுத அணிகலன்களாக அணிந்தேற்றுக்கொள்ளப்பெற்ற நல்லரவும் இளமதியமும் அச்சமுதலியவற்றால் வெண்டலைப் புழையினிடை நுழைவுறவும், ஒதுங்க இடமின்றி யசையவும் அவற்றைப்பாராது உலகத்தின் துன்பநீக்கத்திற்கும் இன்பப்பேற்றிற்கும் இன்றியமையாக் காரணமாகிய நீரைச் சிரமேற்றாங்கி வேண்டுங்கால் வேண்டியவளவாகக் கொடுத்தருளும் நிலைபேறான பெருங்கருணையாளனாதலின், அடியேனாகிய யானும் பிறவித்துன்பத்தினின்

றும் நீங்கிப் பேரின்பம் நுகர்வான்கருதி உமது அருள்வாக்காகிய ஆகம முறைப்படி செய்யும் அபிடேகத்தையும் ஏற்றருள்வாயெனத் தம் வேண்டுகோளைக் கூறுமுகத்தான் அபிடேகஞ்செய்யும் வரன் முறையையும் இதனால் விளங்க வுணர்த்தினர் இதனாசிரியரென்க.

அபிடேகஞ்செய்யுமுறை வெவ்வேறு நூல்களில் பலதிறப் பட ஆகம பேதங்கருதியோ வரன்முறை மரபைத் தழுவியோ செய்யு ளின் யாப்புக்கிசையவோ வேறெக்காரணம்பற்றியோ நோக்குவார் கலக்கமுற்று ஒருவழிப்படாவண்ணங் கூறப்பட்டுள்ளது. இந்நூலா சிரியராகிய முனிவர் பெருந்தகையரர், வடநூற்கடலையும் தமிழ்நூற்சு வையையும் நிலைகண்டுணர்ந்தவ ராதலினாலும், தாம் மேற்கொள்வதொ ன்றனைப் பல்லாற்றானும் ஆராய்ந்து யாரும் ஏற்கும்முறையில் துணி ந்துரைக்கும் பேராற்றலுடையரா தலினாலும், தாங் கூறுவதொன்றனைப் பிற்காலத்தார் கொண்டுகூட்டுப்பொருள்கோள்முதலிய இலக்கணம் பற்றி எண்ணியவாறு பொருள்கொள்ளாவகை நேர்ந்தழியெல்லாம் நிரல்படக்கூறிச்செல்லுந் தன்மையுடையராதலினாலும், அபிடேகஞ் செய்தற் கேற்றபொருள்களுள் இன்றியமையாதன இவையெனவும் இம்முறையே அபிடேகஞ்செய்யும் முறை எனவும் இச்செய்யுளா னும் அடியிற் காட்டப்பெறும் செய்யுளானும் வற்புறுத்தி யருளினா ரென்க.

(பிரபுலிங்கலீலை மாயைபூசைகதி செய்யுள் எண் ௪௫.)

" தயிலமுட னுனிடத்தைந் தையமுத நறுநெய்பா றயிர்செழுந்தேன்
வயலினெழு கரும்புடைத்துக் கொள்சாறு பழம்பிழிந்த மதுரச்சாறு
புயலளவு தாழையிள நீர்நறுஞ்சந் தனக்குழம்பு போற்றுநூலி
னியலினமை தபனமிவை யொன்றன்பி னொன்றுமுறை யிறைவற்
[காட்டி "

இதன்கண் " இவை யொன்றன்பின் ஒன்று முறையிறைவற் காட்டி" என்பதும், அபிஷேகமாலையில் " நல்கு காரண காரியம் முறையின ன்றியே நறு நெய்பா றயிராடியே " என்பதும் 'தானுட்டித் தனது நிறுப்பு' என்னும் உத்திகொண்டு நிற்றல் உணர்தற்பாலன.

'நிப்பை' ஐ விகுதிபெற்ற முன்னிலை யொருமை நிகழ்கால வினைமுற்றுச்சொல்; காலவழுவமைதிபற்றி நிற்பையெனநின்றது (௬)

நரர்கடமி னரசரவர் தமினினிய திவவியாழ்
நண்ணுநர கந்தருவர்தா
நவிலுமவர் தமினமர கந்தருவ ரவர்தம்மி
னுடரிய தேவரவரிற்
சுரரதிப னவனினுயர் சுரர்குரவ னவனினயன்
சொன்முறையி னூறுமடிமேற்
றன்னுசுக மோருதிவலை யளவுமின் றுகமிகு
சுகவேலை புகலீதுவாய்
தரைமுதற் பூதங்கள் புத்திகுண தத்துவம்
தகுதிபெறு பகுதிபுருட
தத்துவம் வித்தைமுத லனவேனுமி வற்றிலறு
சமயரென வேமைவிடாம
லருளினினை யடைதலறு மரியபத மருளுமவ
னபிடேக மாடியருளே
யறிவுற்றெ ணங்கைமலர் சேறிவுற்ற மாந்தவிறை
யபிடேக மாடியருளே.

(இ - ள்) நரர்கள் தம்மின் - (புண்ணிய மிகுதியால் புல் முதலிய பல பிறவியினின்றுந் தப்பி மக்கட் பிறவியை யடைந்த) மனிதர்களினும்,— அரசர் - நிலவுலகத்தரசரும்,- அவர் தம்மின் - அவ்வரசர்களினும்,— இனிய திவவியாழ் நண்ணும்-இனிமையான முறுக்காணியையுடைய யாழிசை பயிலும்,— நரகந்தருவர் - மனிதகந்தருவரும்,— நவிலும் அவர்தம்மின் - (இசைஞானத்திற் சிறந்தவராகச்) சொல்லப்படும் அம்மனித கந்தருவரினும்,— அமரகந்தருவர் - தேவகந்தருவரும்,— அவர்தம்மின் - அத்தேவகந்தருவரினும்,— நாடஅரியதேவர் - நாடுதற்கரிய தேவர்களும்,— அவரின் - அத்தேவரினும்,—சுரர் அதிபன் - தேவர்கட்குத் தலைவனாகிய தேவேந்திரனும்,— அவனின் - அத்தேவேந்திரனிலும்,— உயர்சுரர் குரவன் - யாவரினும் உயர்ந்த தேவகுருவாகிய வியாழமுனியும்,— அவனின்-அவ்வியாழனிலும்,— அயன் - பிரமனும்,- சொல்முறையின் - மேலே சொல்லப்பட்ட வரிசைப்படி,— நூறுமடிமேல் - நூறு நூறுமடங்கு மேன்மையுற்றவராவர்,—துன்னு

சுகம் - ஆனல் அவர்கள் அடையுஞ்சுகமோ,—ஒருதிவலையளவும்இன் ருக — (நினது நித்திய இன்பத்துடன் ஒப்பிட்டுநோக்க) ஒரு துளி யளவும் இன்ருகமுடிய,— மிகுசுகவேலைபுகல் ஈகுவாய் - எவற்றினும் உயர்ந்த சிவாநந்தப் பெருங்கடலுள் புகுதலாகிய முத்தியை அடிய வர்க்குக் கொடுத்தருள்பவனே !,— தரைமுதல் பூதங்கள் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயமென்னும் ஐம்பூதங்களையும்,— புத்தி குணதத் துவம் - புத்தி, குணம் என்னும் இவ்விருவகைத் தத்துவங்களையும்,— தகுதிபெறு பகுதி, புருடதத்துவம் - தகைமைபெற்ற பிரகிருதி, புரு டன் என்னும் இவ்விருவகைத் தத்துவங்களையும்,— வித்தைமுதலன- வித்தியா தத்துவ முதலியவற்றையும்,— எனும் இவற்றில் - பிரம மென வாதிக்கும் இக்காரணத்தால்,— அறுசமயர்என - அறுவகைப் பட்ட சமயத்தாரைப்போல,— எமைவிடாமல் -எம்மையும் புறம்பாகக் கருதி விட்டுவிடாமல்,— அருளின் நினை அடைதலுறும்,— நினது அருட் சத்தியால் நின்னையடையப் பெறும்,— அரியபதம் – அடைதற் கரிய பதத்தினை,— அருளுமவன் - கொடுக்குங் கருணைவள்ளலே !,— அபிடேகம் ஆடியருள் - யான் செய்யும் அபிடேகத்தினை ஏற்றுக்கொ ண்டருளும் என்றபடி. “ அறிவுற்று, என் அங்கைமலர் செறிவுற்று, அமர்ந்த இறை அபிடேகம் ஆடியருள் ” என்பதற்கு முன்னருரைத் தாங் குரைத்துக்கொள்க.

ஆசிரியர், “ நரர்கள்தமில்.........மிகுசுகவேலைபுகலீகுவாய் ” என்னுந் தொடரால் சிவாநந்தத்தி னுயர்வையும், “ தரைமுதல் ...... அருளினினையடைதலுறும் அரியபதம் ” என்னுந் தொடரால் சைவ வருணெறியின் சிறப்பையும் விளங்கவுணர்த்தினராயிற்று.

புகல் - தொழிலாகுபெயர். ‘ அருளின் ’ இன் ஐந்தனுருபு ஏதுப்பொருளது. ப்ரகிருதி, புருஷன், வித்தியா என்னும் வடமொழி கள் முறையே பகுதி, புருடன், வித்தை எனத்திரிந்துவந்தன. ‘ ஈகு பவனே ! அருளுமவனே ! அபிடேக மாடியருள்’ எனக்கூட்டிமுடிக்க.

அகமாகிய வுள்ளக்கமலத்தின்கண் அறிவுருவாக வமர்ந்தும் உம்மை யறியும் ஆற்றலில்லாத எமக்கு அறிவுறுத்திப் பாவனலிங் கமாகவும், புறமாகிய அங்கையின்கண் இஷ்டலிங்கமாகவும் அமர்ந்த ருளும் இறைவனே! நிலவுலகத்தின்கண் புல், புழு, புள், விலங்கு முதலிய பிறவிகளினின்றும் புண்ணிய மிகுதியால் கிடைத்தற்கரிய

மக்கட் பிறவியை யடைந்த மனிதர் உயர்வுடையர் ; அம்மனிதரினும் அரசர் நூறுமடங்கு உயர்வுடையர்; அவ்வரசரினும் இசைஞானமுடைய நரகந்தருவர் நூறுமடங்கு உயர்வுடையர் ; அந்நரகந்தருவரினும் தேவகந்தருவர் நூறுமடங்கு உயர்வுடையர் ; அத்தேவ கந்தருவரினும் தேவேந்திரன் நூறுமடங்கு உயர்வுடையன்; அவ்விந்திரனிலும் தேவகுருவாகிய வியாழன் நூறு மடங்கு உயர்வுடையன்; அவ்வியாழனிலும் பிரமன் நூறுமடங்கு உயர்வுடையன்; ஆனால் அவர்கள் அடையும் சுகமோ நினது நித்திய வின்பத்தினை நோக்கச் சிறியதிவலையளவுமின்றாகின்றது ; ஆதலினால் எல்லாவற்றினும் உயர்வுடையதும் ஒப்புயர்வற்றதுமான சிவாநந்தப் பெருங்கடலுட்புகுந்து என்று மீளாது இன்புற்றிருக்கும் முத்தியை அடியார்க்கருளும் அருட்கடலே ! நிலமுதலிய ஐம்பூதங்களையும், புத்திதத்துவத்தையும், குணதத்துவத்தையும், தகுதிபெற்ற பிரகிருதிதத்துவத்தையும், புருடதத்துவத்தையும், வித்தியாதத்துவ முதலியவற்றையும் பிரம்மமெனக்கூறும் இவ்வகையால் அறுவகைப்பட்ட சமயத்தாரைப்போல எம்மையும் புறம்பாகக் கருதி விட்டுவிடாமல் அருட்சத்தியால் நின்னை யடைதலுறும் கிடைத்தற்கரிய பதத்தினை யருள்பவனே ! அடியேன் ஆட்டும் அபிடேகத்தையும் ஏற்றுக்கொண்டருள்வாயாக என்பது இதன் திரண்டபொருளாகும்.

அறுவகைச் சமயபேதத்தின் விரிவைத் தத்துவ நூல்களுள் ஆராய்ந்தறிக ; விரிவஞ்சி அவை விடுக்கப்பட்டன.

இது, 'வேதாகம நூல்களின் அருமருந்தன்ன கருத்துக்களையுட்கொண்டு அன்புநிலை, அருணிலைகளை விளக்கும் ஆடியன்னஅருள் நூலாக விளங்கலின் சிவார்ச்சனைபுரிந்து சிவாநந்தத்திற் றிளைக்க விரும்பும் பெரியாரனைவராலும் பொன்போற் போற்றத்தகுந்தது' என மேற்கொண்டு சிவாசார சீலரனைவரும் இதனை நாடோறும் ஓதியுணர்ந்து சிவாநந்தப் பெருஞ்செல்வராகுக. சுபம். (௧0)

இஷ்டலிங்க வபிடேகமாலையுரை முற்றிற்று.

ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

ஒருவிகற்பவெதுகைக் கலிநிலைத்துறை.

முன்ன மாலய னிந்திர னமரர்கண் முனிவர்
பன்னு மாரணம் போற்றுதற் கரியநம் பரமன்
மின்னு லாவிய சடாடவிக் கடவுள்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (1)

அன்ன மாயும்வெண் பிறைமருப் பேனமென் றுயு
முன்ன நான்முக னாரணன் றேடரு முதல்வன்
பின்னு வார்சடைப் பெருந்தகை பீடமாக் கோடற்
கென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (2)

தன்னை மேவிவந் தனைபுரி பவன்செய றடுப்பா
னுன்னி மேல்வரும் வெந்திறற் கூற்றினை யுதைத்த
மன்னு மாலயற் கரியவன் வந்துவீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (3)

தன்னை நேர்வட காசிதென் கயிலைசே தார
மன்ன மார்வய லம்பல நமன்றமர் வராமற்
கன்னன் மாமதற் றெறும்விழிக் கடவுள்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (4)

கன்ன லாரமு தினுஞ்சுவை தருவதாய்க் காண்பா
னுன்னு மாலயற் கரியதா மொருமலை யுச்சி
மன்னு மோர்பவப் பிணிமருந் தெளிதுவந் திருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (5)

அன்னை யாகியின் னுயிர்க்குயி ராமரு ளாளன்
பொன்னு மாரமு மணியுமா ரமுதமும் போல்வான்
றன்னை நாடொறுங் கண்டுகண் களிப்பதாச் சார்தற்
கென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (6)

அன்ன மூர்பவன் முதலியோ ரபயமென் றடைய
முன்ன மாலமுண் டவர்துயர் களைந்தருண் முதல்வன்
மின்னு மாமழு வலமுடை வீரன்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (7)

பன்னு மாமறை தமிழினுற் பாகெம் பிக்குப்
பொன்னு மாடையு மணிகளு மூர்தியும் பொருளு
மின்னு மீபவ னருளினன் மேவிவீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (8)

இதுவரை ஆயுட்சந்தா கொடுத்துதவிய பெரியார்.

திருவையாறு அறுபத்துமூவர் மடாலயம் ஸ்ரீமத் சிதம்பரசுவாமிகள் அவர்கள்.

பெருவளநல்லூர் திருவாளர் சா. வைத்திலிங்கையரவர்கள்.

காருகுடி	,,	S. முத்துசாமி ஐயர் அவர்கள்.
கும்பகோணம்	,,	ரா. வேலாயுத ஐயர் அவர்கள்.
வளையடுப்பு	,,	பொன்னுசாமி ஐயர் அவர்கள்.
நாகநாய்க்கம்பட்டி	,,	S. பொன்னுசாமி ஐயர் அவர்கள்.
பலவான்குடி	,,	வெ. மெ. மெய்யப்பசெட்டியார் அவர்கள்
முசிறி	,,	வீ. குமாரவீரையர் அவர்கள்.

இங்ஙனம்,

ப - ர்.

அறிக்கை.

பெரியீர்!

நமது வீரசைவம் என்னும் பத்திரிகையின் இரண்டாவது மலரை 1930 ஜனவரியிலிருந்து தொடங்குவதற்கான காரியங்களைக் கவனிப்பதற்கும், முதலாவதாண்டின் வரவு செலவு திட்டத்தைப் பார்ப்பதற்கும் ஓர் நிறைவேற்றுக் கழகக்கூட்டம் கூடவேண்டியது முக்கியமாதலின், **21—12—29**-ல் மயிலம் ஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் தலைமையில் ஷை மடாலயத்தின்கண் கூடப்பெறும். கூட்டத்திற்கு அடியிற்கண்ட உறுப்பினர்கள் வரவேண்டுமெனவேண்டப் பெறுகிறார்கள்.

காரியதரிசி.

புரவலர் :—

ஸ்ரீமத் சிவஞானபாலயசுவாமிகள், பொம்மபுரம்

உறுப்பினர் :—

1. திருவாளர் G. C. வீரப்பா B. A., L. L. B., அவர்கள், பெங்களூர்.
2. ,, சிவப்பிரகாச ஐயர் அவர்கள், அரும்பாவூர்.
3. ,, சா. வைத்திலிங்க ஐயரவர்கள், பெருவளநல்லூர்.
4. ,, S. வேலாயுத ஐயர் அவர்கள், சொரத்தூர்.
5. ,, வீ. குமாரவீரையர், முசிறி.

சந்தா நேயர்கட்கோர் விண்ணப்பம் :—

ஐயன்மீர்!

நமது வீரசைவத்தின் பனிரெண்டாவது இதழும் வெளிவருகின்றது. இனி அடுத்தமாதத்தில் இரண்டாவதாண்டுத் தொடக்கத்தில் இரண்டாவது மலரும் அரும்பி மலரும்பருவநிலையிலிருக்கின்றது. நமது மகாசங்கத்தின் உறுப்பினர்களுள், மேலவட்டகையினைத்தவிர நடுவட்டகையிற் சிலரும், கீழவட்டகை சிதம்பரம் வட்டகையிற் பலரும் பத்திரிகையின சந்தாவை இன்னும் அனுப்புவதில் தம் எண்ணத்தைச் செலுத்தாது இருக்கின்றனர். அவர்கள் சங்கத்தின் உறுப்பினர்ச் சந்தாவை வாங்கவரும் பொறுப்பாளரிடம் இதனையும்சேர்த்துக் கொடுத்துவிடலாமெனக் கருதியிருப்பதாகத் தெரியவருகின்றது. பொறுப்பாளர்களும் காரியதரிசிகளும் ஏழாவதாண்டு நிறைவுவிழாத் தொடக்கத்தில் கோடை விடுமுறையில் வெளியேறலாமெனக்கருதியிருக்கின்றார்கள்போலும்! இது ஆண்டு நிறைவைப்போலன்றி மாதந்தோறும் நடைபெறவேண்டியதொரு பெருவேலையாதலின், மிகுதியான வேலையைக் கொடுக்காது இவ்விதழ் கிடைத்தவுடன் இவ்வாரத்திலேயே நேயர்கள் தமது சந்தாத்தொகையை அனுப்பிவைத்தல் வேண்டுமென் அவர்கள் பெருந்தன்மையை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,

நிறைவேற்றுச் சழகத்தார்.

விளம்பரம்.

கும்பகோணத்தையடுத்த திருநாகேஸ்வரத்தில் கீழ்க்கண்ட விலாசதாரரிடம் நற்சிலையில் அழகுபெறச்செய்த 'சிவலிங்கம்' கைவசத்திலிருக்கின்றது. வேண்டுவோர், அம்மன்காசு, அரைக்கால் ரூபா, பைசா, காலணா இவ்வளவில் வேண்டியதோர் அளவைக் குறிப்பிட்டெழுதி V. P. P.-ல் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம் :—

போ. சி. முனிசாமி பண்டாரம்,
கல்காரத்தெரு, உப்புலியப்பன் கோவில்,
திருநாகேஸ்வரம் போஸ்ட் S. I. R.